விலை ரூபா: 15.00


*Registered as a News paper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 21 சனிக்கிழமை (05.07.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 199




# அரசியல் கட்சிகளுடன் ஒன்றிணைந்து தமிழக முதல்வர் ஆதரவு தரவேண்டும்



## நடேசன் வேண்டுகோள்

(சென்னை)

தமிழக அரசியல் கட்சிகளுடன் ஒன்று சேர்ந்து, எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக தமிழ்நாட்டு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி குரல் கொடுக்க வேண்டுமென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார். தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் குமுதம் வார இதழுக்கு அவர் வழங்கிய நேர் காணலில் இதனைத் தெரிவித்துள்ளார். (10ஆம் பக்கம் பார்க்க)



## நான்கு நாட்களாக ஓமந்தையூடான போக்குவரத்துக்குத் தடை

(வவுனியா)

ஓமந்தை சோதனை நிலையம் நான்காவது நாளாக நேற்றும் மூடப்பட்டிருந்தமையால் வன்னிப் பகுதி மக்கள் கடும்நெருக்கடிகளைச் சந்தித்துள்ளனர்.

வான்படைத் தாக்குதலை அடுத்து ஓமந்தை சோதனை நிலையம் கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் மூடப்பட்டது. இதனால் மக்களின் போக்குவரத்து, பொருள் வரவு, நோயாளர்களின் பயணம், அரச திணைக்கள அலுவலர் (10ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு கோரிக்கைகளை முன்வைத்து

## யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் நேற்று முதல் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் நேற்று முதல் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். 4 கோரிக்கைகளை முன்வைத்து மேற்கொள்ளப்பட்டுள்ள பகிஷ்கரிப்பு தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு,

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் 4 ஆம் திகதி முதல் (நேற்று) தவிர்க்க முடியாத பகிஷ்கரிப்பு ஒன்றை முன்னெடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த 16 ஆம் திகதியிலிருந்து யாழ். மருத்துவபீடத்தில் இறுதியாண்டு மாணவர்களினது கற்றல் நடவடிக்கைகள் முற்றாகவும், இரண்டாம் வருட மாணவர்களுக்கான சில பரீட்சைகளும் மற்றும் மூன்றாம் வருட மாணவர்களுக்கான (10ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல்துறை மற்றும் கடற்புலிகளும் முன்னரங்கப் போராட்டத்தில் களமிறங்கியுள்ளனர்

### இராணுவத் தளபதி கூறுகிறார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை மற்றும் கடற்புலி உறுப்பினர்கள் முன்னரங்கப் போராட்டங்களில் நிலைநிறுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

போதிய போராளிகள் இன்றி தமிழீழ விடுதலைப் புலிகள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## தரமற்ற பொருட்களின் விநியோகத்தினை நிறுத்துமாறு அரசாங்க அதிபர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

ப.நோ.கூ.சங்கங்கள் அரிசி, கோதுமை மா உட்பட எவ்விதமான தரமற்ற பொருட்களையும் பொதுமக்களுக்கு நிவாரணமாகவோ அல்லது விற்பனை செய்யவோ வேண்டாமென யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

அவ்வாறு தரமற்ற பொருட்கள் களஞ்சியங்களில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பின் உரிய களஞ்சியத்தில் மீள ஒப்படைத்து தரமான பொருட்களை பெற்று பொதுமக்களுக்கு விற்பனை (10ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ ரீதியிலான வெற்றியைப் பெற ராஜபக்ஷ-பொன்சேகா கூட்டணி முயற்சி

### ‘விடுதலைப் புலிகள்’ ஏடு தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கம்பளம் விரித்தது போன்ற நகர்வுத் தந்திரத்துடன் -பெரும் நம்பிக்கையுடன்- தொடங்கப்பட்ட படை நடவடிக்கை படையினருக்கு பாரிய இராணுவ நெருக்கடிகளை கொடுத்து வருகின்றது.

புலிகள் ஒரு வலிந்த தாக்குதலை காட்டமாக நடத்துவதற்கான தெரிவுக்கு சிங்களப் படையின் விரிந்த நகர்வு இடம் கொடுத்துள்ளது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகார வழி ஏடான ‘விடுதலைப் புலிகள்’ ஏடு தெரிவித்துள்ளது.

நேற்று வெளியான விடுதலைப் புலிகள் ஏட்டின் 141-வது இதழில் ‘வன்னிப் போர் தீவிரமடைகிறது’ எனும் தலைப்பில் வெளியான முகப்புச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

வன்னிப் போர் அரங்கம் நான்கு பெரிய களங்களாக வகைப்படுத்தப்படுகின்றன. முதலில் மன்னார். மற்றும் வட போர் அரங்கங்களில் சிங்களப் படைகள் சண்டைகளை தொடங்கியிருந்தன.

பின்னர் மணலாற்றுக் களமுனையில் அது சண்டைகளை (10ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மாகாண தமிழ்மொழித் தினப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண மட்ட 2008ஆம் ஆண்டுக்கான தமிழ் மொழித் தின எழுத்தாக்கல் போட்டிகள் 12 ஆம் திகதியும் ஆங்கில தின எழுத்தாக்கல் போட்டிகள் 13 ஆம் திகதியும் யாழ்.வேம்படி மகளிர்கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

அத்துடன் மாகாணமட்ட தமிழ்மொழித் தினப்போட்டிகள் 19,20 ஆம் திகதிகளிலும் ஆங்கில தினப் போட்டிகள் 21 ஆம் திகதியும் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் வைத்து வீடியோ ஒளி, ஒலி பதிவு செய்யப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சுற்றுப் போட்டி-யாழ்.மாவட்டம் 15 வயதின் கீழ்ப் பிரிவு

யாழ்.பாடசாலை கிரிக்கெட் சங்கம் நடத்தும் போட்டியில்

இன்று

சென்.பற்றிக்ஸ் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி

ஹாட்லிக் கல்லூரி எதிர் மகாஜனாக் கல்லூரி


சென்.ஜோன்ஸ் கல்லூரி (B) எதிர் யாழ்.மத்திய கல்லூரி

யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் யூனியன் கல்லூரி

★ முதலில் குறிப்பிட்ட பாடசாலை மைதானங்களில் போட்டிகள் நடைபெறும்

ஊடக அனுசரணை:- வலம்புரி

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



அமரர் சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் அஞ்சலி நிகழ்வு யாழ். மாநகராட்சி மன்றத்தால் நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது இதில் யாழ். மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ உரையாற்றுவதையும், பேராசிரியர் சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா முதலானோர் நினைவுரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் மற்றும் நல்லை ஆதீன முதல்வர், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் என்.சண்முகலிங்கன், பேராசிரியர் கோபாலகிருஷ்ணஐயர் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும், அன்னையின் திருவுருவப்படம் வைக்கப்பட்டிருப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: கவி)


### விற்பனைக்குண்டு

39/2, சோமசுந்தரம் வீதி, யாழ்ப்பாணத்தில் சிறியரக வீடு உடன் விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும்.

S.வின்சென்ற்
39/2, சோமசுந்தரம் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-0776161058 (1426)

### தவறிவிட்டது

2ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி, யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த மரியராசா சிமித்ராஜ் என்பவரது தேசிய அடையாள அட்டை (850564108V) அல்லைப்பிட்டி கடற்கரை வீதியில் 02.07.2008 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (1429)


# சர்வதேச கடல் எல்லையை மீறி இலங்.கடற்பரப்புக்குள் செல்ல வேண்டாம்

## தமிழக மீனவர்களுக்கு எச்சரிக்கை

(சென்னை)

சர்வதேச கடல் எல்லையை மீறி இலங்கை கடற் பரப்புக்குள் செல்ல வேண்டாமென தமிழக மீனவர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவின் கடலோர பாதுகாப்பு பிரிவினரே இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளனர்.

இந்தத் தகவல் இராமநாதபுரம் மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் வசிக்கும் அனைத்து மக்களுக்கும் அனுப்பப்பட்டிருப்பதாக மண்டம் கரையோர பாதுகாப்பு பிரிவின் கட்டளை அதிகாரியான ஜனார்த்தனன் தெரிவித்துள்ளார்.

தலைமன்னார் மற்றும் மன்னார் பகுதிகளில் தமிழீழ விடுதலை புலிகளுக்கும் இலங்கை கடற் படையினருக்குமிடையில் மோதல் இடம்பெற்று வருவதினால் தமிழக மீனவர்களை சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி செல்லவேண்டாமென அறிவுறுத்தியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நடுக்கடலில் இலங்கைக் கடற்படையினரோஅல்லது இந்தியக்கடற்படையினரோ அடையாளத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு நெருங்கி வரும்போது தப்பியோட முயற்சிக்கவேண்டாமெனவும் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றனர். இது தவிர சட்ட விரோத கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமெனவும் தமிழக மீனவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. (அ)

# க.பொ.த.(உ/த) மாணவர்களுக்கான துரித மீட்டல் செயலமர்வு

(அல்வாய்)

2008 ஆகட்ஸ் மாதம் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் யாழ்.மாவட்ட மாணவர்களுக்கான துரித மீட்டல் செயற்திட்டத்திற்கென வட மாகாண மாகாணக் கல்வி பணிப்பாளரினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 4 நிலையங்களில் பொருத்தமான வளவாளர்களைப் பயன் படுத்தி இச் செயலமர்வினை நடாத்துவதற்கென ரூ. 2 இலட்சத்து 86 ஆயிரத்து 400 ரூபா ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது.

இச் செயலமர்வுகள் இம்மாதம் 10 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம்–தீவகம், தென்மராட்சி, வலிகாமம், வடமராட்சி வலயங்களுக்கு முறையே வேம்படி மகளிர் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி, இராமநாதன் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் ஆகிய நிலை (ஓ–19)

# கோண்டாவில் சென்.செபஸ்தியான் ஆலயத்தைத் திருத்த கோரிக்கை

கோண்டாவில் கிழக்கில் அமைந்துள்ள சென்.செபஸ்ரியான் ஆலயம் சிதைவடைந்து போயுள்ளது. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரால் அடிக்கல் நாட்டப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட இவ் ஆலயம் எல்லைகள் எதுவுமற்று காணப்படுகிறது.

இந்நிலையில் 7 வருடங்களுக்கு முன்னர் தேவாலயத்தை புனரமைக்கவும் மதில் அமைக்கவும் வேலைகள் ஆரம்பமாகின. மதில் அரைகுறையாக அமைக்கப்பட்டிருந்தாலும் ஆலய வேலைகள் ஆரம்பிக்கப்படக்கூட இல்லை.

செபஸ்தியாரின் புனித திருச்சொருபம் தற்காலிக தகரக்கொட்டகைக்குள் வைக்கப்பட்டுள்ளது. கடைசியாக அருட்பணிபுரிந்த பங்குத் தந்தையும் நாட்டை விட்டு வெளியேறி விட்ட நிலையில் புதிய் பங்குத்தந்தையும் நியமிக்கப்படவில்லை. திருப்பலி, பூசைகள் ஒப்புக்கொடுக்கப்பட்டு 6 வருடங்கள் ஆகிவிட்டன.

எனவே இவ் ஆலயத்தை யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர்கள் நேரடியாகப் பார்வையிட்டு திருப்பணி வேலைகளை பூர்த்தி செய்துதரும்படி அப்பகுதி மக்கள் கேட்டுக் கொள்கின்றார்கள். (ஓ–36)


JESWIN & POINT CITY COMPUTER INSTITUTE

2ND CROSS STREET, POINT- PEDRO

வளர்ச்சியின் 5 ஆண்டின் நிறைவில்

படிப் படியான

CHOICE OF COURSE

J P C I

- Diploma in Microsoft Office
- Diploma in Bisnuss course (DTP)
- Diploma in Video Mixing
- Diploma in Hardware Engineering
- Diploma in Computer Driving license
- Diploma in Accounting package
- Certificated Course in Internet &Email
- Certificated Course in GIT, ICT
- Certificated Course in Type setting
- Certificated Course in Auto Cad
- Certificated Course in Kids programme
- Certificated Course in Phone Repairing
- Certificated Course in TV&Radio Repairing

10.07.2008 அன்று இணையும் மாணவர்களில் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படும் அதிஷ்டசாலிக்கு Computer Printer ஒன்று பரிசாக வழங்கப்படும்.

இன்று தொடக்கம் 10.07.2008 வரை இணையும் மாணவர்களுக்கு பயிற்சிநெறியின் 5 மாதங்களிற்கும் மாதாந்த கொடுப்பனவாக ரூபா 500/= வீதம் மாணவர் அபிவிருத்திக் குழுவால் வழங்கப்படும். மேலும் மாணவர்களுக்கு விசேட சலுகைகளும் பயிற்சியக மாணவர் அபிவிருத்திக் குழுவினால் மேற்கொள்ளப்படும். அனுமதியின் போது மாணவர்கள் பயிற்சிநெறிக்கான அனுமதிக்கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.

பயிற்சியக மாணவர் அபிவிருத்திக் குழுவினால் வடமராட்சியின் நிகழ்வுகளின் வரலாறு, முயற்சியாளர்கள், சாதித்தோர் என்ற அடிப்படையில் 5வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு 'தகவல் களம்' சஞ்சிகை வெளிவரவுள்ளது. இது 3 மாதத்திற்கு ஒருமுறை வடமராட்சியின் பல பகுதிகளின் வரலாற்று நிகழ்வுகளையும் முயற்சியாளர்களின் நிகழ்வுகளையும், கல்வி, தகவல் தொழில்நுட்பம் தொடர்பாகவும் தாங்கி வரும் சஞ்சிகையாக அமையும்


## பிரயாண அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு சிபார்சு செய்தல்

பிரயாண அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கான சிபார்சு திணைக்களத் தலைவர்களுக்கு மாத்திரம் அரசாங்க அதிபரினால் வழங்கப்படும் எனவும் ஏனைய சகல உத்தியோகத்தர்களும் தத்தமது பிரிவுக்குப் பொறுப்பான சிவில் நிர்வாக அலுவலகத்தில் இருந்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறும் மிக அவசரமான நோயாளர்கள் பிரயாணம் செய்ய வேண்டுமாயின் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளருடைய சிபார்சுடன் விண்ணப்பங்களை சமர்ப்பித்தால் அவர்களுக்கு சிபார்சு செய்து கொடுக்கப்படும் எனவும் யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார். (அ)

# பணி சூட்டும் வைபவம்

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் இணுவில் லயன்ஸ் கழகம் இன்று சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு இணுவில் அறிவாலயத்தில் கழக நிர்வாக உறுப்பினர்கள் 2008/2009 ஆண்டு பணி சூட்டு வைபவமும் கழகம் பட்டயம் பெற்ற உதய நாளை நினைவு கூரலும் பெருமை கொள்ளலும் நிகழ்வினை நடாத்த உள்ளதாக இணுவில் லயன்ஸ் கழகக் தலைவர் லயன் த.கைலாசநாதன் அறிவித்துள்ளார். (ஓ)

## பொறியியல் தொழில்நுட்பத்தில் பட்டக் கற்கை நெறியை மேற்கொள்வதற்கான பதிவு

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் பொறியியல் தொழில்நுட்பத்தில் பட்டக் கற்கை நெறியை மேற்கொள்வதற்காக பதிவுகளை செய்யவுள்ள மாணவர்கள் இன்று சனிக்கிழமை காலை 9மணிக்கு திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்திற்கு சமுகமளித்துஉதவிப் பதிவாளரிடம் பதிவுகளை செய்யுமாறு இக்கற்கை நெறியை மேற்கொள்ளவுள்ள மாணவர்களை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் கேட்டுக்கொள்கிறார். (அ)

## ஆரம்பப்பிரிவு பரிகாரக்கல்வி பயிற்சிநெறி பயிற்றுநர்களை பயிற்றுவிக்கும் செயலமர்வு

BESU அலகினால் GTZ நிறுவனத்தின் நிதி, தொழில்நுட்ப உதவிகளுடன் யாழ்.மாவட்டத்தில் நடாத்திவரும் நடவடிக்கைகளில் ஆரம்பப்பிரிவு பரிகாரக்கல்வி பயிற்சி நெறி தொடர்பாக பயிற்றுநர்களை பயிற்றுவிக்கும் செயலமர்வு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் உள்ள யாழ்.வலய ஆசிரியர் நிலையத்தில் இம்மாதம் 11 ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் ஒவ்வொரு வலயத்தில் இருந்தும் 6 பயிற்றுநர்கள் பங்குபற்றவேண்டும். இவ் அறுவரில் ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர், குறித்த கோட்டத்திற்குரிய ஆசிரிய ஆலோசகர், ஆரம்பப்பிரிவு பகுதித்தலைவர், ஆசிரியர்கள் உள்ளடங்குவார். இச் செயமலர்வுகளில் கொழும்பில் இருந்து வரும் நிபுணர்கள் கலந்து கொள்வது குறிப்பிடத்தக்கது.(ஓ–19)

## யாழ்.மாவட்ட பாவனையாளர்களுக்கு 'லங்கா சீமெந்து' நிறுவனத்தின் விநியோகம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு இணங்க லங்கா சீமெந்து நிறுவன தலைவர் சிசிர பரணகம எடுத்த முயற்சியின் பயனாக ஆயிரத்து 500 மெற்றிக் தொன் சீமெந்து, மேக்ஸ் யால கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டு தற்பொழுது காங்கேசன் துறைமுகத்தில் இறக்கப்படுகின்றது.

இவை யாழ்.அரச அதிபர் க.கணேஷால் சிபார்சு செய்த யாழ். மாவட்ட பாவனையாளர்களுக்கு விநியோகிக்கப்படும். பாவனையாளர்கள் இணுவிலிலுள்ள லங்கா சீமெந்துக்கிளை காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளலாம் என லங்கா சீமெந்து லிமிட்டட் பிரதம கணக்காளர் அறிவித்துள்ளார். (ஓ)

# இன்று ஒரு தகவல்

## அளவு கடந்த அன்பு

"உங்கள் மீது எனக்கு அளவுகடந்த அன்பு" என்று யாராவது சொன்னால் அதை அலட்சியமாக நினைக்கக் கூடாது. அளவுக்கு மீறினால் எல்லாமே இடைஞ்சல் தான். அன்பும் அப்படித்தான்.

அன்பு அதிகமாக இருந்தால் அது எப்படி கெடுதல் செய்யும் என்ற சந்தேகம் உங்களுக்கு வரலாம். தசரதன் கைகேயி மேல் அளவு கடந்த அன்பு தான் ராமன் காட்டுக்குப் போகும் படி ஆயிற்று!

விஸ்வாமித்திரர் சொல்கிறார் (கம்பராமாயணம்) என்னை மாதிரி முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் கஷ்டம் வந்தால் முதலில் முருகனிடம் போவோம். பின்பு பரமசிவனிடத்தில் முறையிடுவோம். அதற்குப்பிறகு திருமாலிடம் போவோம். பிறகு பிரமன், இந்திரன் இவர்களாலும் முடியாவிட்டால் அயோத்திக்கு வருவோம் என்கிறார்.

"உன்னை விட்டால் வேறுகதி உண்டோ" என்று தசரதனைப் பார்த்து விஸ்வாமித்திரரே சொல்கிறார்.

அப்படிப்பட்ட அரசன் –தசரதன் கைகேயி காலில் வந்து விழுகிறான் "உன் பாதங்களைத் தொட்டுக் கெஞ்சிக் கேட் கிறேன்... ராமனைக் காட்டுக்கு அனுப்பாதே!" என்கிறான். தசரதனுடைய இந்த நிலை மைக்கு என்ன காரணம்? கைகேகி மேல் வைத்த அளவு கடந்த அன்பு தான் காரணம்.

அளவுகடந்த அன்பு, நீதிக்கும் நியாயத்திற்க்கும் புறம்பான காரியங்களையும் செய்ய வைத்து விடும். தசரதன் மிகச் சிறந்த நீதிமான். தர்மத்துக்கு விரோதமாக ஒரு காரி யமும் செய்யாதவன். அப்பேறப்பட்டவன் தன் மனைவியைப் பார்த்து என்ன சொல்கிறான் தெரியுமா?

"உனக்காக நான் என்ன செய்ய வேண்டும் சொல்... ஒரு குற்றமும் செய்யாத ஒருவனைக் கொல்ல வேண்டுமா?, கொல்கிறேன்! மரண தண்டனைக் கைதியை விடுதலை செய்ய வேண்டுமா? செய்கிறேன்! எந்தப் பிச்சை காரனை யாவது கோடீஸ்வரன் ஆக்கச் சொல்கிறாயா? அல்லது கோடீஸ்வரனை பிச்சைக் காரன் ஆக்க வேண்டுமா? எது வானாலும் செய்கிறேன்!" என்கிறான்.

நீதிக்கு விரோதமான இந்தப் பாவங்களைச் செய்வதற்கு அப்பேறப்பட்ட அரசன் எப்படித் துணிந்தான்! மனைவி மீது வைத்த அன்பு தான் காரணம்!

திரிசூலம், வஜ்ராயுதம், வாள் – இவற்றால் தாக்கப்பட்டால் கூட அதையெல்லாம் அலட்சியம் செய்யும் ஒருவன் காம தேவனுடைய மலர் அம்புகள் தாக்கினால் அதை அவனால் தாக்குப்பிடிக்க முடிவதில்லை.. விழுந்து விடுகிறான் என் கிறார் துளசிதாசர்.

அப்பா–அம்மா –மனைவி –மக்கள் எல்லோரிடமும் அன்பு அவசியம் தான். ஆனால் அந்த அன்பு அறிவுக்குப் புறம் பானதாக இருக்கக் கூடாது.

அளவுக்கு மீறியும் இருக்கக் கூடாது. அப்பொழுது தான் வாழ்க்கை சுகமாக இருக்கும் இல்லையென்றால் அவஸ்தைதான்!

அளவுக்கு மீறிய அன்பு என்பது சரி அறிவுக் ப் புறம்பான அன்பு என்பது எது? ஒரு தாய்க்கு ஜலதோஷம் என்று வைத்துக் கொள்வோம். குழந்தைமேல் அன்பு இருந்தும் அந்தக் குழந்தைக்கு முத்தம் கொடுப்பதற்கு தூக்கி வைத் துக்கொண்டு கொஞ்ச ஆரம்பித்தால் நன்றாக இருக்குமா? அது தான் அறிவுக்குப் புறம்பான அன்பு. அன்பு என்பது அறிவு பூர்வமாக இருக்க வேண்டும்

இந்தக் காலத்து காதலன் – தனது காதலியிடம் சொன் னான் "உனக்காக நான் எதுவும் செய்வேன். நெருப்பில் நடக்க வேண்டுமா நடக்கிறேன். நீரில் குதிக்க வேண்டுமா குதிக்கிறேன். உயிரைக் கொடுக்க வேண்டுமா கொடுக் கிறேன்!" என்றான்.

"சரி... வருகிற ஞ ாயிற்றுக்கிழமை 6 மணிக்கு இதே இடத்துக்கு வாங்க ...!" என்றாள் காதலி இவன் கொஞ்சம் யோசித்துப் பார்த்துவிட்டு "அன்றைக்கு மழை பெய்யாமல் இருந்தால் வந்து விடுகிறேன்!" என்றான்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் தென்மராட்சி கல்வி வலயம்

(நேற்றைய தொடர்ச்சி)

*பிரிவு–3*

வே.லதுஜா–சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சி.பிறிஸ்லா–மீசாலை வீரசிங்கம் ம.வி., மா.மாலினி–மீசாலை விக்கினேஸ்வரா ம.வி.

*பிரிவு–4*

சி.கனிஷ்சா–உசன் இராமநாதன் ம.வி, ப.மயூறர்–மீசாலை வீரசிங்கம் ம.வி., ச.குகப்பிரியா–சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

*பிரிவு–5*

த.குலமகள்–மீசாலை வீரசிங்க ம.வி., ம.அபிராமி–சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சி.பர்மினா–டிறிபேர்க் கல்லூரி.

**இசையும் அசைவும்** *பிரிவு–1*

சி.சியானி–கைதடி சேதுகாவரர் வித்தி., அ.வேஜின்மேரி–சாவகச்சேரி றோ.க.த.க.பா., ஹ.ஹரினி–நுணாவில் கிழ.அமிர்தாம்பிகை வி.

**இசை தனி** *பிரிவு–2*

க.பூங்குன்றன்–வரணி ம.வி., வி.தேனுஜா–சாவகச்சேரி மகளிர் கல்லூரி, க.தனோசா–மிருசுவில் அ.த.க.பா.

*பிரிவு–3*

த.தர்சிகா–சாவகச்சேரி மகளிர் கல்லூரி, ந.சங்கீதன்–சாவகச்சேரி இந்துக்கல்லூரி, க.ஹரிகரன்–டிறிபேர்க் கல்லூரி.

*பிரிவு–4*

க.துவாரகன்–வரணி ம.வி., ப.பிரதீபா–கொடிகாமம் அ.த.க.பா., பி.சரண்யா–கச்சாய் அ.த.க.பா.

*பிரிவு–5*

மு.சௌமியா–சாவகச்சேரி இந்துக்கல்லூரி, மா.சுகிதா–வரணி ம.வி., கு.வினோஜா–நர்வற்குழி ம.வி.

**இசை குழு தி.போ.** *பிரிவு–1*

சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மட்டுவில் சந்திரமௌலீச வித்தி., சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

*பிரிவு–2*

வரணி ம.வி., சாவகச்சேரி இந்துக்கல்லூரி, மட்டுவில் சந்திரமௌலீச வித்தி.

**நடனம் தனி** *பிரிவு–1*

த.ரஜீனா–சாவகச்சேரி இ.ஆரம்ப பா., சௌ.சிந்துஜா–மீசாலை வீரசிங்கம் ம.வி., ம.நிஷானி–சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

*பிரிவு–2*

தி.நவலாஜினி–சாவகச்சேரி இந்துக்கல்லூரி, செ.சரண்யா–மீசாலை வீரசிங்கம் ம.வி., வி.மேரிடயானி–கொடி.திருநாவுக்கரசு ம.வி.

*பிரிவு–3*

ஜெ.கம்சனா–சாவகச்சேரி மகளிர் கல்லூரி, த.துஜீபா–சாவகச்சேரி இந்துக்கல்லூரி, பு.ஜென்சி–மீசாலை வீரசிங்கம் ம.வி.

*பிரிவு–4*

சி.கபிலா–சாவகச்சேரி இந்துக் கல்லூரி, பி.தமயந்தி–சாவகச்சேரி மகளிர் கல்லூரி, த.றஜிதா–மீசாலை வீரசிங்கம் ம.வி.

*பிரிவு–5*

சி.நிருஜா–சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ந.மாதங்கி–மீசாலை வீரசிங்கம் ம.வி., த.ரெமினா–சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

**நடனம் குழு –1** *தி.போ.*

சாவகச்சேரி இந்துக்கல்லூரி, கச்சாய் அ.த.க.பா., சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

**நாடகம் தி.போ.**

அல்லாரை அ.த.க.பா., கைதடி நாவற்குழி அ.த.க.பா., கொடி.திருநாவுக்கரசு ம.வி., சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி.

**வில்லுப்பாட்டு** *தி.போ*

டிறிபேர்க் கல்லூரி, உசன் இராமநாதன் ம.வி., நாவற்குழி ம.வி.

**விவாதம் தி.போ.**

வரணி ம.வி., சாவகச்சேரி இந்துக்கல்லூரி, இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணியம் வித்தி.

**தமிழறிவு வினாவிடை** *தி.போ.*

சாவகச்சேரி இந்துக்கல்லூரி, மீசாலை வீரசிங்கம் , கொடி. திருநாவுக்கரசு ம.வி.

**நாட்டுக்கூத்து சிந்து நடை**

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தி., மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.

**நாட்டுக்கூத்து வடமோடி**

கைதடி நாவற்குழி ம.வி.

**நாட்டுக்கூத்து தென்மோடி**

கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. (இ)

# இந்தியாவிலுள்ள ஈழத்தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கப்பட வேண்டும்

## தொல் திருமாவளவன் கோரிக்கை

இந்தியாவிலுள்ள ஈழத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கப்பட வேண்டும் எனக்கோரி நேற்று முன் தினம் தமிழகத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக தமிழக அகதி முகாம்களில் வாழும் ஈழத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப் படவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படுவதாக விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.



விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அயல் நாடுகளைச் சேர்ந்தவர்கள் தமிழகத்தில் சொத்துக்கள் வாங்கக் கூடாது என அண்மையில் முதலமைச்சர் கருணாநிதி அறிவித்ததைத் தொடர்ந்து கியூபிரிவு காவல்துறையினர் இலங்கை தமிழர்களை விசாரித்து வருகின்றனர். இதனால் அகதி முகாம்களிலுள்ள ஈழத் தமிழர்கள் பல்வேறு இன்னல்களுக்கும் மனஉளைச்சல்களுக்கும் உள்ளாகின்றனர்.

கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய மண்ணில் வசித்து வரும் ஈழத் தமிழர்களை அயல் நாட்டவர் போன்று நடத்துவது மனித நேய மற்ற செயல் என தொல் திருமாவளவன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (அ–6)

## தமிழகத்துக்கு மேலும் ஒரு தொகுதி அகதிகள்

இலங்கையிலிருந்து மேலும் ஒரு தொகுதியினர் தமிழகத்திற்கு அகதிகளாகச் சென்றுள்ளனர். 7 குடும்பங்களைச் சேர்ந்த 18பேரே இவ்வாறு அகதிகளாகச் சென்றுள்ளனர். இவர்கள் தனுஷ்கோடி அருகிலுள்ள அரிச்சல் முனையை புதன் கிழமை சென்றடைந்துள் ளனர்.

தம்மை படகிலேற்றி வருவதற்கு தலா 5.ஆயிரம் பணம் செலுத் திய தாகக் குறிப்பிட்ட இவர்கள், யாழ். குடாநாட்டில் தமக்கு உணவு மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவு வதாகவும் தெரிவித்துள்ளனர். (அ)

## இராசிபலன்

05.07.2008

(ஆனி 21, சனிக்கிழமை)

பூசம் முற்பகல் 11.13 மணிவரை

திருதியை பின்னிரவு 3.33மணிவரை

இராகுகாலம் 08.58–10.28 மணிவரை

சுபநேரம்–02.58–04.28 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தன்னம்பிக்கைக்குறைவு, கல்வியில் ஆர்வம், முயற்சிதாமதம். |
| இடபம் | மாதர்நட்பு, நற்கீர்த்தி, மனோ தைரியம், முயற்சி கைகூடும். |
| மிதுனம் | போசனசுகக்குறைவு, அதிக செலவு, திடீர்நன்மை, கடினவார்த்தை. |
| கடகம | வெகுமானும், சயனசுகம், ஆழ்ந்த சிந்தை, தொழில் முயற்சி. |
| சிங்கம் | பிதாசிந்தை, காரிய அலைச்சல், பிறருக்கு உதவுதல், பணவிரயம். |
| கன்னி | நண்பர்கள் சந்திப்பு, தொழில் வருமானம், முயற்சி கைகூடும். |
| துலாம் | அதிகபிரயாசை, உறவினர்வருகை, பிரபுத்தனம், போசனசுகம். |
| விருச்சிகம் | சரீரப்பிரயாசை, பிரயாணம், வீண்பயம், காரியதாமதம். |
| தனுசு | வீண்பகை, முயற்சி தடங்கல், பொருள்விரயம், முழங்கால் வலி. |
| மகரம் | திடீர்பயணம், அபூர்வசந்திப்பு, முயற்சிகைகூடும், விருந்துபசாரம். |
| கும்பம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், ஆரோக்கியம், சுபசெய்தி. |
| மீனம் | புத்திரரால் கவலை, காரிய இடையூறு, பித்தரோகம். |

வளவன்

# அமைச்சரவைத் தீர்மானங்கள்

## மதத்தலங்களுக்கு இலவச சீ.எல்.எப்.மின் குமிழ்கள்

சகலமதத்தலங்களுக்கும் இலவசமாக சீ.எல்.எப். மின் குமிழ்களை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

இதற்கான பிரேரணையை மின் சக்தி எரிசக்தி அமைச்சர் டபிள்யூ டி.ஜே. செனவிரத்ன முன்வைத்திருந்தார். அதிகரித்த மின் பாவனையை கட்டுப்படுத்தும் நோக்கிலும் எண்ணெய் விலை அதிகரிப்பினால் ஏற்றப்பட்டுள்ள நெருக்கடியைக் குறைக்கும் வகையிலும் மின் சாரத்தை சிக்கனமாக பயன்படுத்த உதவும் இவ்வகையான மின்குமிழ்களை மதத்தலங்களுக்கு வழங்க தீர்மானித்துள்ளது. (அ)

## ஆசிரியர் நியமனம் தொடர்பான தேசிய கொள்கை

ஆசிரியர் நியமனங்களை வழங்குவதற்காக 2009ஆம் ஆண்டு முதல் தேசிய கொள்கை ஒன்றைத் தயாரித்து பின்பற்றுவதற்கு அமைச்சரவைஅங்கீகாரம் வழங்கியது.

இதற்கான பிரேரணையை கல்வி அமைச்சர் சுசில்பிரேம ஜயந்த முன் வைத்திருந்தார். இதன்படி அரசாங்கப் பாடசாலைகளில்ஆசிரியர் நியமனம் பெறுபவர்கள் குறைந்த பட்ச தகுதியாக பட்டதாரி பரீட்சை ஒன்றில் சித்தியடைந்திருக்க வேண்டும். குறிப்பிட்ட பாடத்தில் விஷேட பயிற்சிகள் வழங்கப்பட்டதன் பின்னரே அவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படும். (அ)

## உதைபந்தாட்டப் போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் செப்ரம்பர் மாத நடுவில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளதால் பாடசாலை அணிகளிற்கிடையிலான பயிற்சிகளை ஆரம்பிக்கும்படி தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஓ-29)

## உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு போட்டிகள்

(சாவகச்சேரி)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகர சபையினால் சபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளும் இடைநிலை, உயர்பிரிவு மாணவர்களுக்கிடையிலான பேச்சு, கட்டுரை, கவிதை பண்ணிசைப் போட்டிகளும் நடாத்தப்படவுள்ளதாகவும் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் தத்தமது பாடசாலை அதிபர் ஊடாக விண்ணப்பிக்கும்படியும் நகர சபை செயலர் திருமதி ஆ.குணமணிதேவி கேட்டுள்ளார். (ஓ-29)

## விரிவுரையாளர்கள் இந்தியாவிலிருந்து வருகை

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியில் ஜூன் மாத முதற்பகுதியில் இருந்து ஆரம்பமாகி நடைபெற்று வரும் பரதநாட்டிய முதுகலைமாணி, நுண்கலைமாணி, டிப்ளோமா கற்கைநெறிகளுக்கான பரீட்சைகளின் செய்முறைப் பரீட்சைகளை நடத்துவதற்காக இந்தியாவிலிருந்து கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி விரிவுரையாளர்களான பேராசிரியர் எஸ்.மதன் குமார், கலாநிதி எஸ்.சுப்பிரியா ரவிக்குமார் ஆகியோர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளார்கள்.

இவ்வாற இறுதிவரை யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்கவுள்ள இவ் இரு விரிவுரையாளர்களும் தற்போது, பரதநாட்டிய கற்கைநெறிகளைப் பயிலும் மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சைகளை நடத்தி வருவதுடன் நடனவகுப்புக்களையும் நடத்திவருகின்றார்கள்.

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரி, திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம், கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி ஆகியவற்றுடன் இணைந்து வளாகம் கடந்த பட்டப் படிப்புகளை, கடந்த ஆண்டு முதல் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

## குடாநாடு முழுவதும் இன்று மின்வெட்டு

சுன்னாகம் மத்திய மின் நிலையத்தில் அவசிய திருத்த வேலைகள் காரணமாக இன்று சனிக்கிழமை குடாநாடு முழுவதும் ஒன்பது மணி நேரம் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மின்சார சபை அறிவித்துள்ளது.

காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்றும் பிரதேச மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (அ)

## தெப்பக் காட்சியும் வீணை உபசார சமர்ப்பணமும்

(சித்தங்கேணி)

சித்தங்கேணி தனுவோட்ட பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிவ சிதம்பரேஸ்வரர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தில் 6 ஆம் நாள் திருவிழாவான இன்று சனிக்கிழமை தெப்பக் காட்சியும் வீணை உபசார சமர்ப்பணமும் இடம்பெறும். (17)

## உள்ளூராட்சி வாரம் யூலை 9-15 சாவகச்சேரி நகரசபையின் செயல்திட்டங்கள்

(சாவகச்சேரி)

உள்ளூராட்சி வார்த்தினை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபையினரால் மேற்கொள்ளப்படவுள்ளவேலைத் திட்டங்கள்மற்றும் செயற்பாடு பற்றிய விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

**ஆரம்பநாள் - சுகாதாரமும்- துப்பரவும்**

•நகர எல்லைக்கு உட்பட்ட வீதிகள், கால்வாய்கள் தெருக்கள், பொது இடங்களை துப்பரவாக்குதல். • சுகாதாரம் தொடர்பான விளக்கங்களை மக்களுக்கு எடுத்துச் கூறுதல் •டெங்கு ஒழிப்பு தொடர்பான துண்டுப் பிரசுர விநியோகம்

**2ஆம் நாள் -கல்வி, விளையாட்டு நூல் நிலைய அபிவிருத்தி**

•முன்பள்ளிச் சிறார்களுக்கிடையிலான விளையாட்டு போட்டி •தரம்-5 மாணவர்களுக்கிடையிலான சித்திரப்போட்டி• இளநிலை மாணவருக்கிடையிலான கட்டுரைப்போட்டி •மேல் நிலை மாணவர்களுக்கிடையிலான பேச்சுப்போட்டி •ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி • மாணவர்களுக்கிடையே பண்ணிசைப் போட்டி •உள்ளூராட்சி வாரம் தொடர்பான நூல் நிலையக் கருத்தரங்கு• வர்த்தகர்களுக்கிடையிலான போட்டி• சனசமூக நிலையங்களுக்கிடையிலான போட்டி

**3ஆம் நாள் -சுற்றாடல் தினம்**

•சூழல் பாதுகாப்புத் தொடர்பான கருத்தரங்கு • மரம் நடுகை மேற்கொள்ளல் •பொது இடங்களில் சிரமதானம்.

**4ஆம்நாள் அபிவிருத்தி செயல்திட்டம்**

•கொல்லங்கிராய் மயானம், பொதுச் சந்தை துப்பரவுப் பணி•கடைகள் வியாபார நிலையங்களில் சுகாதாரம் தொடர்பான பரிசோதனைகள், சுகாதாரப் பரிசோதகரது உதவியுடன் மேற்கொள்ளல்• பழுதடைந்த கால் வாய்வாய்களை புனரமைத்தல்.

**5ஆம் நாள் பொது அமைப்புக்கள்**

சனசமூக நியைங்கள், வர்த்தக சங்கம் பிரதிநிதிகள், பாடசாலை அதிபர்கள், நூலக வாசக வட்ட உறுப்பினர்கள், நூலக அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள், நகர அபிவிருத்தி ஆலோசனைச் சபை உறுப்பினர்கள், நலன் விரும்பிகள், பொது அதிகாரிகள் ஆகியோர் ஒன்றிணைந்து ஆலோசனைக் கூட்டம் நடாத்துதல்

**6ஆம் நாள் மக்களுக்கு உள்ளூராட்சி சபை தொடர்பான விளக்கங்கள்**

•சோலை வரி தொடர்பான விபரங்களை மக்களுக்கு தெளிவுபடுத்துதல் •வியாபார சான்று, கடைவாடகை தொடர்பான விளக்கங்களை வழங்குதல்

**இறுதி நாள் நிகழ்வுகள்**

•வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில், சான்றிதழ் வழங்குதல் •முதல் நிலை பெற்ற நிகழ்வுகளில் முக்கியமானவற்றை வெளிப்படுத்தல்• கலை நிகழ்ச்சிகள், • 'நகரணி' உள்ளூராட்சி வார விசேட இதழ் வெளியிடுதல். (ஓ-29)

## தாச்சி சுற்றுப் போட்டிகள்

யூனியன் அசூர்ன்ஸ் ஆதரவில் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டு சங்க அனுசணையுடன் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் நடாத்தும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு உடுவில சிந்து எதிர் தாவடி காளியம்பாள் ஆகிய கழகங்கள் மோதவுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை 4 மணிக்கு மயிலிட்டி இளைஞர் ஒன்றியம் எதிர் சுதுமலை புவனேஸ்வரியம்மாள், நாளை மறுதினம் மயிலிட்டி ஒற்றுமை எதிர் சுன்னாகம் காந்தரூபன் ஆகிய கழகங்கள் மோதவுள்ளன. (அ-6)



# யாழ் செய்திகள்

## மஹோற்சவம்

(மருதங்கேணி)

அல்வாய் மாவைச்சந்தி பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் உற்சவம் நடைபெறும். 15 ஆம் திகதி இரதோற்சவமும் 16ஆம்திகதி ஆடிப்பிறப்பு அன்று தீர்த்த உற்சவமும் நடைபெறும்.(ஓ-35)

## கணனிப் பயிற்சிநெறி

(சித்தங்கேணி)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையால் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கணனிப் பயிற்சிநெறி நடைபெறவுள்ளது. இவ் பயிற்சி நெறியில் இணைய விரும்புவோர் எதிர்வரும் 7 ஆம்திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் கணனிப் பயிற்சி மையத்திற்கு சமுகமளிக்குமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கணனிப் பயிற்சிநெறி பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ-17)

## கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நடாத்தும், யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை (இசை/நடனம்/சித்திரமும் வடிவமைப்பும்) வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றும் அனுமதி கிடைக்காத மாணவர்களுக்கான கலந்துரையாடல் 7 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் பொது அறையில் நடைபெற உள்ளது. அனைத்து மாணவர்களும் தவறாது சமுகம் தருமாறு மாணவர் ஒன்றியம் கேட்டுக் கொண்டுள்ளது. (ஓ)

## திரைப்படக்காட்சி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம் பெற்றுவரும் கல்விசார்/ கலைத்துவம் சார் படக்காட்சி தொடரில் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வெள்ளைக்காரர் வீட்டிற்கு வேலை செய்வதற்காக சிறைப்பிடித்துச் செல்லப்பட்ட மூன்று அவுஸ்திரேலிய தொல்குடிச் சிறுமிகள் தமது கிராமத்திற்கு திரும்பும் துன்பப் பயணமாக அமைந்த 'ரபிட் புறுவ் பெ(F)ன்ஸ்' (RABBIT PROOF FENCE) திரைப்படம் வீடியோக் காட்சியாக அரசறிவியல் விரிவுரை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

இது 1931 இல் நிகழ்ந்த உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டது. திரைப்படக் காட்சியின் இறுதியில் திரைப்படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம் பெறும்.

ஆர்வலர்கள் அனைவரும் வருகை தந்து பயன்பெற முடியுமென புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (ஓ)



அண்மையில் நடைபெற்ற வலிகிழக்கு பிரதேசசபையின் கோப்பாய் உபஅலுவலக கட்டடத் திறப்பு விழாவில் வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜா, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் ஆகியோர் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

## மாணிக்கவாசகர் குருபூசை

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய இந்து மாணவர் மன்றம் நடாத்தும் மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8 மணிக்கு வித்தியாலய பிரார்த்தனைமண்டபத்தில் நடைபெறவுள்ளது.நிகழ்வில் விசேடபூசை,வழிபாடுகள், பஜனை, மாணவர்களின் பேச்சு,கவிதை, பக்திப் பாடல்கள், வில்லுப்பாட்டு,ஆசிரியர்களின் சிறப்புரைகள் ஆகியன இடம்பெறும். (ஓ)

## ஆன்மீக சொற்பொழிவு

புலோலி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவில் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில்பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீகசொற்பொழிவுத் தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை 'இராமாயணம்' தொடரில் தமிழ் ஞானவித்தகர் பொன்.சுகந்தன் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (ஓ-35)

## இலக்கியக் கருத்தரங்கு

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் இலக்கிய அவையின் ஏற்பாட்டில் நடாத்தப்படும் இலக்கிய கருத்தமர்வின் இரண்டாவது கருத்தமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிமுதல் 12.30 மணிவரை திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

சிறுகதை தொடர்பாக இடம்பெற்ற முதலாவது கருத்தமர்வின் தொடர்சியாக இடம் பெறவுள்ள இவ் இரண்டாவது கருத்தமர்வு "தமிழ் இலக்கியத்தினை விளங்கிக் கொள்ளல்- நாவல்" என்னும் பொருளில் நாகம்மாள் நாவலை அடிப்படையர்கக் கொண்டு இடம் பெறவுள்ளது. இக்கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் க.அருந்தாகரன் கலந்துகொண்டு கருத்துரையாற்றவுள்ளார்.

க.பொ.த.உயர்தரத்தில் தமிழ்மொழியை ஒரு பாடமாகப் பயிலும் மாணவர்களின் பாடப்பரப்பினையும் ஆசிரியர்களின் கற்பித்தல் தொடர்பான விடயங்களையும் உள்ளடக்கி இடம்பெறவுள்ள இக் கருத்தமர்வில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஓ)

## சங்காபிஷேகம்

உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திர சுவாமி ஆலயத்தின் வருடாந்த 1008 சங்காபிஷேகம் 8ஆம்திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30மணிக்கு ஆனி உத்தர நட்சத்திர சுப வேளையில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மாலை 4.30 மணிக்கு விசேட பூசை வழிபாட்டினைத் தொடர்ந்து சுவாமி அழகிய பூந்தண்டிகையில் வெளி வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள் பாலிக்கவுள்ளார். (ஓ)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி

யாழ் மாநகர எல்லைக்குட்பட்ட நல்லூர் அரியாலை பிரதேச வளர்ப்பு நாய்களுக்கான (A.R.V)விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9மணிமுதல் 12 மணிவரை கண்டி வீதி தியாகராஜா படிப்பகத்திலும் பிற்பகல் 2 மணிமுதல் 3.30 மணி வரை அரியாலை காந்தி சனசமூக நிலையத்திலும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9மணி முதல் 12 மணி வரை கச்சேரி நல்லூர் வீதி நாற்சந்தியிலும் பிற்பகல்2 மணிமுதல் 3.30 வரை ஏ.வி.றோட் அருணோதயா சனசமூக நிலையத்திலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கும் மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (அ-6)

# நோத்முதல் கோபல்லவா வரை 27

## ஆங்கிலேயரும் கண்டியரசனும்

ஆங்கிலேயர் கண்டியை நோக்கிப் படை எடுத்தமையைக் கேட்ட கண்டியரசன் அங்குறாங்கட்டையில் மறைந்திருந்தான். இதற்குள் யாழ்ப்பாணக் கோட்டைக்குள் ஆங்கிலேயர் பாதுகாப்பளித்து வந்த முத்துச்சாமியை 8.7.1803 இல் கண்டி மன்னன் என மக்டோவல் தளபதி ஆள்பதி அவர்கள் அனுமதியுடன் பிரகடனஞ் செய்தான். இதனை அறிந்த பிலிமை, ஆள்பதிக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினான். அதிலே தானும் ஆங்கிலேயரும் ஏதாவது ஓர் உடன்படிக்கைக்கு வருதல் வேண்டும் என்றும் குறிப்பிட்டான். அவனுக்கு விடை எழுதிய ஆள்பதி அவர்கள், பிலிமையைக் கண்டி அரசனாக்குவதானால் பின்வரும் நிபந்தனைகளைக் குறிப்பிட்டார்.

1.கண்டியரசனாய் இருக்கும் ஸ்ரீவிக்கிரம ராசசிங்கனைப் பாதுகாப்புக்காக ஆங்கிலேயர் வசம் ஒப்புவித்தல் வேண்டும்.

2. முத்துச்சாமியியை வன்னிப் பகுதிக்கு அரசனாக்குதல் வேண்டும்.

3. கண்டி அரசை அவாவும் பிலிமை ஆங்கிலேயருக்கு ஏழு கோறளை நிலங்களையும், மக்டோவல் கோட்டைய்யையும், கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு ஒரு வீதி அமைக்கத் தேவையான நிலத்தையும் கொடுத்தல்வேண்டும் என்றும், முத்துச்சாமிக்கு ஆண்டு தோறும் 30000 காசு கொடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். இந்த நிபந்தனைகள் நிறைவேறவில்லை.

இதற்குள் அங்குறாங்கட்டையில் மறைந்திருந்த ஸ்ரீவிக்கிரமராசசிங்கன் கண்டி அதிகாரிகளையும் மக்களையும் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டான். பிலிமையின் சூழ்ச்சிகளும் அம்பலமாயின. அரண்மனைக்கு மீண்ட அரசனுக்கு நற்செய்திகள் கிடைத்தன. ஆங்கிலேயருடைய

**மீள் பார்வை**

படைகள் பலர் நோய்வாய்ப்பட்டும் இறந்தும் போயினர். எஞ்சிய வீரரைக் கண்டிப் படையினர் தீவிரமாக எதிர்த்து எதிரிகளைச் சிதறடித்தனர். ஆங்கிலேயர் பக்கத்தில் கூலிக்குப் போர்புரிந்த மலாயர் படை கண்டியரசன் பக்கஞ் சார்ந்தது .ஆங்கிலேயரால் நிலைமையைச் சமாளிக்க இயலவில்லை. அவர்கள் ஸ்ரீவிக்கிரமராசசிங்கனின் வீரப் பிரதாபங்களை அறிந்தனர். பிலிமை எழுதியதற்கு முற்றும் மாறாக அவன் வீரம் இருந்தமையைக் கண்டு வியந்தனர். மேலும் போர் புரிய இயலாமல் தவிர்த்து இறுதியில் யாரோ ஒரு வீரனின் தலைப்பாகையை குலைத்து அதனை மூங்கில் தடியில் கட்டி வெள்ளைக் கொடியெனத் தூக்கிச் சரணாகதி அடைந்தனர். சரணாகதியடைந்ததும் யுத்தம் ஓய்ந்தது. கண்டியர் பக்கலில் இருந்து பிலிமையும் ஆங்கிலேயர் பக்கலில் மேஜர் டேவியும் சமாதானப் பேச்சுப் பேசினர். மேஜர் டேவியுடன் சென்ற நூர்டின் என்ற மலாயர் படைத்தலைவன் இருவருக்கும் மொழிபெயர்ப்பாளனாயிருந்தான்.

1.மேஜர் டேவியும், தேக சுகமுள்ள வீரரும் திருகோணமலைக்கு மீளவும்,அவர்கள் மருந்தில்லாத வெறுந் துவக்குகளை மாத்திரம் கொண்டு போகவும், அவர்களுடைய பண்டங்களை அவர்கள் கண்டியில் விட்டுப் போகவும், காயப்பட்ட படைகளைப் பிலிமை வைத்திய சாலையில் வைத்துப் பராமரிக்கவும்,ஆங்கிலேயர் பிரகடனஞ் செய்த முத்துச்சாமியை ஆங்கிலேயர் அழைத்துக் கொண்டு போகவும், மகாவலிகங்கையைக் கடப்பதற்கு வேண்டிய ஓடங்களைக் கண்டியரசன் ஆங்கிலேயருக்குக் கொடுத்து உதவவும் உடன்படிக்கை செய்யப்பட்டது.


மழையில் நனைந்து கங்கைக் கரையை அடைந்த படையினர் அங்கே ஓடங்கள் இல்லாமையைக் கண்டனர். அவர்கள் மரங்களின் கீழ் தங்கி மழைக்கு ஒதுங்கி இரவு முழுவதும் குளிரால் நடுங்கினர். அடுத்தநாள் காலையில் இரு ஆங்கிலேயர் மெதுவாக நடந்து அங்கே வந்து படைகள் கலங்கும் வண்ணம் தங்கள் அனுபவத்தைக் கூறினர். வைத்தியசாலையில் தங்கிய அத்தனை வீரரையும் கண்டிப் படையினர் தலையில் அடித்துக் கொன்றதாயும் தாம் இருவரும் படுக்கைகளின் கீழ் பதுங்கிக் கிடந்து



அடுத்தநாள் அதிகாலையில் மறைந்து வெளியேறியதாயும் கூறினர். இவ்வாறு ஆங்கிலேயர் படைகள் மகாவலிகங்கைக் கரையிலே மறுநாள் இரவும் மழையில் நனைந்து மனம் நொந்திருந்தனர். அடுத்த

**க.சி.குலரத்தினம்**

நாள் அரசனுடைய தூதுவர் அங்கே சென்று ஆங்கிலேயர் படைகள் ஆயுதங்களோடு அரசன் முன் சரணாகதியடைந்து புதிய நிபந்தனைகளை ஏற்க வேண்டும் என்றனர். தளபதி டேவி வேறொன்றும் செய்ய இயலாமல் முத்துச்சாமியை அரசனிடம் கொடுத்தான். தனது படைகளை மன்னன் முன் அனுப்பினான். அனுப்பப்பட்ட படைகள் வழியில் உள்ள மல்லர்களால் அடித்துக் கொல்லப் பட்டார்கள். அடி பெற்று விழுந்தவர்களுள் பாண்ஸ்லி என்ற வீரனும் ஒருவன். அவன் இறந்தவன் போலப் பாசாங்கு செய்து கிடந்து, நடு இரவில் காடுகளுள் நுழைந்து. மகாவலி கங்கையை நீந்தி, மறுகரை சேர்ந்து மாத்தளையை அடைந்து, மக்டோவல் கோட்டையை அடைந்தான். அங்கே இருந்த தலைவன் மாட்கே என்பவனிடம் நடந்தவற்றைக்கூறி உடனடியாக திருகோணமலைக்குப் போனார்கள். இவ்வாறு ஆங்கிலேயரின் முதலாவது படை எடுப்பால் ஒரே ஒருவனைத் தவிர எல்லோரும் இறந்தனர். மேஜர் டேவியின் படைகள் நிர்மூலமாக்கப்பட்ட தினம் 26.5.1803 என்று ஒரு நடுகல்லில் எழுதப்பட்டுள்ளது. மேஜர் டேவி கண்டியில் சிறையிடப்பட்டு அங்கே இறந்தான் என்பர். இப்படை எடுப்பால் ஆங்கிலேயருக்கு ஏற்பட்ட பொருட் செலவு,படைச் செலவு,- அழிவுகள் அளவிட முடியாதவை என ஆள்பதியவர்களே அழாத குறையில் எழுதியுள்ளார்கள். (தொடரும்)




சாவகச்சேரி பிரதேச சபை கச்சாய் பொதுநூலகத்தில் சாவகச்சேரி பிரதேசசபை செயலாளர் வே.சிவராஜலிங்கம் தலைமையில் நடைபெற்ற 'ஒருபுத்தகம் ஒருசமுதாயம்' எனும் நிகழ்வில் 'குழந்தை இலக்கியகர்த்தா, கவிமணி' பட்டத்தைப் பெற்ற கல்வயல் வே. குமாரசாமிக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் சரா .புவனேஸ்வரன் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஆசிரியர்கள், மாணவர்கள், வாசகசகர்கள் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

## வெக்டர் பொ.வேலாயுதம், ஆ.மகாதேவன் ஆகியோரின் ஞாபகார்த்த மாதாந்த தொடர் போட்டிப் பரீட்சை

### வெற்றி நிச்சயம் 2008 A/L உயிரியற்பிரிவு
### தொடர் இலக்கம் 07 (மே) தரநிலைப்பட்டியல்

| Index | Name | School | Total | Z-score | Rank |
|---|---|---|---|---|---|
| 1027 | சந்திரதேவன் ரகுராஜ் | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 235 | 2.7581488 | 1 |
| 1091 | அருள்நேசன் அல்பேட் நிமலன் | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 228 | 2.5603696 | 2 |
| 1515 | சாகினி நடராசா | இளவாலை கன்னியர் மடம் ம.வி | 213 | 2.2221481 | 3 |
| 2037 | அருணகிரிநாதன் ஹரீந்திரன் | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 212 | 2.2033191 | 4 |
| 1051 | குமாரசாமி நிருஜன் | கொக்குவில் இந்துக்கல்லூரி | 211 | 2.1863106 | 5 |
| 1026 | நவநேசன் கௌசிகன் | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 206 | 2.0435937 | 6 |
| 3818 | சௌமியா வன்னியசிங்கம் | வட இந்து மகளிர் கல்லூரி | 202 | 1.9551803 | 7 |
| 1090 | அனந்தசயனன் கிருத்திகன் | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 200 | 1.9297771 | 8 |
| 1029 | சிறிக்குமாரன் சிவமைந்தன் | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 199 | 1.8865061 | 9 |
| 2609 | துசிதப்பிரியா மகேந்திரன் | வேம்படி மகளிர் கல்லூரி | 198 | 1.8522701 | 10 |
| 1112 | விஜயரட்ணம் ஜெயராஜா | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 192 | 1.7509527 | 11 |
| 2537 | ஜனனி பஞ்சாட்சரம் | வேம்படி மகளிர் கல்லூரி | 193 | 1.7481798 | 12 |
| 2053 | இராமநாதன் கஜதீபன் | சென்ஜோன்ஸ் கல்லூரி | 192 | 1.7373663 | 13 |
| 2532 | மாதுரி ஸ்ரீபாலன் | வேம்படி மகளிர் கல்லூரி | 193 | 1.7341721 | 14 |
| 2045 | செல்வராசா பிரதீபன் | ஹாட்லிக்கல்லூரி | 193 | 1.7262918 | 15 |
| 2097 | தியாகலிங்கம் வினோபன் | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 192 | 1.7185628 | 16 |
| 1081 | சௌந்தரராஜன் விசாகன் | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 192 | 1.7133457 | 17 |
| 2010 | இராஜநாயகம் ராஜ்றெனுசியஸ் | சென்ஜோன்ஸ் கல்லூரி | 190 | 1.6840569 | 18 |
| 2617 | கிருஸ்ணப்பிரியா கோபாலகிருஸ்ணன் | வேம்படி மகளிர் கல்லூரி | 191 | 1.6789329 | 19 |
| 2522 | பிருந்தா இராசரத்தினம் | வேம்படி மகளிர் கல்லூரி | 191 | 1.6780226 | 20 |
| 1059 | கந்தசாமி ராகுலன் | கொக்குவில் இந்துக்கல்லூரி | 190 | 1.6615031 | 21 |
| 2545 | கஜனி நித்தியானந்தராஜா | வேம்படி மகளிர் கல்லூரி | 188 | 1.6432468 | 22 |
| 2632 | சுபா ராஜேந்திரன் | சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | 188 | 1.6271741 | 23 |
| 3510 | பாலகிருஸ்ணன் பிரகலாதன் | உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி | 188 | 1.6265083 | 24 |
| 2602 | ஷமிக்கா மரியதாசன் | திருக்குடும்ப கன்னியர் மடம் | 187 | 1.5950031 | 25 |
| 2586 | சிவஞானசுந்தரம்பிள்ளை டிலானி | வேம்படி மகளிர் கல்லூரி | 186 | 1.5854537 | 26 |
| 2510 | சௌதாமினி சூரியகுமாரன் | விக்டோரியாக் கல்லூரி | 186 | 1.5813913 | 27 |
| 3622 | பாகினி சிவசுவாமி | மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 187 | 1.5782646 | 28 |
| 3704 | நித்தியானந்தன் வசீகரன் | ஹாட்லிக்கல்லூரி | 186 | 1.5744212 | 29 |
| 3502 | ரங்கநாதன் மோகனப்பிரியன் | ஹாட்லிக்கல்லூரி | 185 | 1.5594101 | 30 |
| 1030 | மகாதேவா பிரதீபன் | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 186 | 1.5551287 | 31 |
| 3816 | நிரோஜி சந்திரமோகன் | வட இந்து மகளிர் கல்லூரி | 186 | 1.5550195 | 32 |
| 3504 | விஜயகுமார் நிதீஸ்பன் | ஹாட்லிக்கல்லூரி | 185 | 1.5486222 | 33 |
| 2538 | சயந்திகா சிவகுமார் | சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | 184 | 1.5236658 | 34 |
| 3123 | சிவபாதசுந்தரம் கருணதீபா | வேம்படி மகளிர் கல்லூரி | 183 | 1.4910735 | 35 |
| 1645 | ரம்மியா சிவராஜசுந்தரம் | வேம்படி மகளிர் கல்லூரி | 182 | 1.4838335 | 36 |
| 1109 | செல்வரட்ணம் அல்பேட் ஜோசவ் | புனித பத்திரிசியார் கல்லூரி | 181 | 1.4716624 | 37 |
| 3803 | சுகன்யா செல்வாநந்தன் | மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 182 | 1.4710898 | 38 |
| 2096 | வைத்தீஸ்வரன் ஐங்கரன் | மானிப்பாய் இந்துக்கல்லூரி | 181 | 1.4632932 | 39 |
| 2637 | துவாரகா மகேந்திரன் | சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | 180 | 1.4449531 | 40 |

Bio. Mean = 45.09205 Phy. Mean = 42.117154 Che. Mean = 32.933054
Bio.Sd = 14.561509 Phy Sd = 13.032742 Che Sd = 14.004621

பரீட்சைக்குத் தோற்றிய மொத்த மாணவர்களின் எண்ணிக்கை : 598

### வெற்றி நிச்சயம் 2008 A/L கணிதப்பிரிவு
### தொடர் இலக்கம் 07 (மே) தரநிலைப்பட்டியல்

| Index | Name | School | Total | Z-score | Rank |
|---|---|---|---|---|---|
| 7529 | தருமகுலசிங்கம் முகுந்தன் | ஹாட்லிக்கல்லூரி | 259 | 2.81985 | 1 |
| 5068 | சுபாஸ்கரன் சாலவன் | கொக்குவில் இந்துக்கல்லூரி | 231 | 2.27111 | 2 |
| 5010 | ஞானசபேசன் யதுர்ஸன் | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 229 | 2.20654 | 3 |
| 5114 | பரமநாதன் நிரோசன் | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 229 | 2.16327 | 4 |
| 5109 | குலரட்ணராஜா கணரூபன் | விக்டோரியாக்கல்லூரி | 225 | 2.09485 | 5 |
| 7502 | ஸ்ரீஸ்கந்தராஜா ஷேயந்தன் | உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி | 226 | 2.09222 | 6 |
| 7530 | சிவபாலசிங்கம் சத்தியவரதன் | ஹாட்லிக்கல்லூரி | 224 | 2.06636 | 7 |
| 5039 | கணேசலிங்கம் தர்மேஸ்வரன் | கொக்குவில் இந்துக்கல்லூரி | 222 | 2.03519 | 8 |
| 7533 | இராஜேந்திரா ஹரீசன் | ஹாட்லிக்கல்லூரி | 220 | 2.02907 | 9 |
| 7504 | இரத்தினராசா.றஜீவன் | ஹாட்லிக்கல்லூரி | 220 | 1.96682 | 10 |
| 7023 | இன்பராசா சிவகுணாளன் | சாவகச்சேரி இந்துக்கல்லூரி | 211 | 1.88804 | 11 |
| 5063 | ஸ்ரீலவன் யாதவன் | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 213 | 1.86683 | 12 |
| 5108 | இராஜகோபாலசர்மா ஜயகிருஷ்ணன் | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 211 | 1.79467 | 13 |
| 5062 | முருகதாசன் பார்த்தீபன் | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 210 | 1.76618 | 14 |
| 6013 | சிவபாலசற்குணம் மோகனராஜ் | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 210 | 1.76466 | 15 |
| 5060 | குமரேஸ்வரன் சுபாஸ்கர் | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 207 | 1.7346 | 16 |
| 7515 | சத்தியானந்தன் கரிதரன் | ஹாட்லிக்கல்லூரி | 205 | 1.70723 | 17 |
| 5011 | சிவகுமாரன் நிஸாந் | கொக்குவில் இந்துக்கல்லூரி | 203 | 1.66391 | 18 |
| 6093 | ஜனார்த்தனன் திபாகர் | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 202 | 1.61492 | 19 |
| 7503 | இராசேந்திரா மாஹரன் | உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி | 202 | 1.58912 | 20 |
| 5020 | பால்ராஜ் கிரிபரன் | கொக்குவில் இந்துக்கல்லூரி | 199 | 1.57652 | 21 |
| 6086 | காந்தராஜன் கேசிகன் | யாழ்ப்பாணக்கல்லூரி | 198 | 1.5708 | 22 |
| 5057 | மயூரன் விஜயகுமார் | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 201 | 1.56898 | 23 |
| 6025 | லோகேஸ்வரன் சுஜிபன் | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 197 | 1.56584 | 24 |
| 5121 | போல்பத்தினாதன் ஜேம்ஸ்றஜி | யாழ மத்திய கல்லூரி | 194 | 1.54414 | 25 |
| 6157 | சிவசுந்தரம் பிரணவன் | கொக்குவில் இந்துக்கல்லூரி | 197 | 1.54383 | 26 |
| 6052 | கிருஸ்ணராஜா யாதவராஜா | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 19 | 1.47926 | 27 |
| 5002 | குணரத்தினம் ஜெயமோகன் | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 192 | 1.44616 | 28 |
| 6099 | நாகரட்ணம் கமலநாதன் | சென்ஜோன்ஸ் கல்லூரி | 195 | 1.42688 | 29 |
| 7508 | இராயேஸ்வரன் கோபிராகவன் | உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி | 195 | 1.42308 | 30 |
| 6009 | நடராஜா பிரகாஷ் | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 192 | 1.39151 | 31 |
| 5009 | சிற்றம்பலம் அரவிந்த் | கொக்குவில் இந்துக்கல்லூரி | 190 | 1.38767 | 32 |
| 6057 | காந்தரூபன் முகிலன் | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 189 | 1.38726 | 33 |
| 5078 | பாலசிங்கம் தர்சன் | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 189 | 1.37284 | 34 |
| 5076 | ஸ்ரீகாந்தா கபிலன் | யாழப்பாணம் இந்துக்கல்லூரி | 186 | 1.37239 | 35 |
| 5072 | நடராஜா மனோஜ் | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 190 | 1.35275 | 36 |
| 7722 | சிவராசா துவாரகன் | ஹாட்லிக்கல்லூரி | 190 | 1.32618 | 37 |
| 5113 | சத்தியசீலன் செந்தில்க்குமாரன் | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 186 | 1.28661 | 38 |
| 6081 | செல்வநாயகம் கரிகாலன் | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 186 | 1.28357 | 39 |
| 6072 | குமாரதேவன் நிரோஜன் | கொக்குவில் இந்துக்கல்லூரி | 183 | 1.26035 | 40 |

Mat. Mean = 45.39467 Phy. Mean = 45.561743 Che. Mean = 31.75545
Mat.Sd = 19.51151 Phy Sd =14.364645 Che Sd = 14.86145

பரீட்சைக்குத் தோற்றிய மொத்த மாணவர்களின் எண்ணிக்கை : 578

ஏனைய மாணவர்களின் பெறுபேறுகளை அறிய விரும்பின் கல்வி நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்.
பரீட்சை இணைப்பாளர் - கணிதம் & உயிரியல்

# மலேசிய ஆட்சி அதிகாரத்தை விரைவில் கைப்பற்றுவோம்

## -அன்வர் இப்ராஹிம்



(கோலாலம்பூர்)

தன்னினச் சேர்க்கை குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ள மலேசிய எதிர்க்கட்சித் தலைவர் அன்வர் இப்ராஹிம், தான் மிக விரைவில் அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றவுள்ளதாக அறிவித்துள்ளார்.

தனது அலுவலகத்தில் பணிபுரியும் 23 வயது ஆண் உதவியாளருடன் தன்னினச் சேர்கையில் ஈடுபட்டதாக அன்வர் இப்ராஹிம் (60வயது) மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், கோலாலம்பூரில் தனது ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய அன்வர் இப்ராஹிம், ஆளும் தேசிய முன்னணிக் கூட்டமைப்பு அரசாங்கமானது ஊழல்கள் நிறைந்ததாக பயனுறுதிப்பாடற்றதாக அக்கறையற்ற ஒன்றாக உள்ளதாக குற்றஞ்சாட்டினார்.

கடந்த மாதம் 41 சதவீதத்தால் அதிகரித்த எரிபொருள் விலைகள் உள்ளடங்கலாக நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு முடிவு கட்டுவதாக அவர் வாக்குறுதியளித்தார்.

அன்வர் இப்ராஹிம் 1998 ஆம் ஆண்டு பிரதிப் பிரதமராகப் பணியாற்றிய சமயம், இதையொத்த தன்னினச் சேர்க்கைக் குற்றச்சாட்டுக்கு இலக்காகி 6 வருட சிறைத் தண்டனை அனுபவித்தமை குறிப்பிடத்தக்கது. பொலிஸ் பாதுகாவலில் இருந்த சமயம் பொலிஸாரால் அவர் மோசமாகத் தாக்கப்பட்டதுடன், நஞ்சூட்டி அவரைக் கொல்லவும் முயற்சி எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. 6 பிள்ளைகளின் தந்தையான அன்வர் இப்ராஹிம், தன்மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு மறுப்புத் தெரிவித்துள்ளார். (அ)

# போதைப் பொருள் கடத்தற் படகை பிடிக்க பிரிட்டிஷ் இளவரசர் உதவி

(லண்டன்)

பிரித்தானிய இளவரசர் வில்லியம், 80 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கொகேயின் போதைவஸ்தை கடத்திச் சென்ற படகொன்றை மடக்கிப் பிடிக்க அமெரிக்க கடற்கரை பாதுகாப்புப் படையினருக்கு உதவியுள்ளார்.

பிரித்தானிய கடற்படையில் பணியாற்றும் இளவரசர் வில்லியம் (26வயது), உலங்கு வானூர்தியொன்றில் ரோந்து சென்ற வேளை அத்திலாந்திக் சமுத்திரத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் விரைந்து சென்ற 50 அடி நீளமான படகை அவதானித்துள்ளார்.

இத்தகைய படகுகள் மெதுவாக செல்வதே வழமையாக உள்ள நிலையில், அதிவேகமாக பயணித்த மேற்படி படகு இளவரசருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இளவரசர் அமெரிக்க கடற்கரை பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவருக்கு இதுதொடர்பில் தகவல் அனுப்ப நடவடிக்கை எடுத்ததையடுத்து மேற்படி படகு முற்றுகையிடப்பட்டது.

அந்தப் படகிலிருந்து 80 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான 900 கிலோ கிராம் நிறையுடைய போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதுடன் படகிலிருந்த 5 பேரும் கைது செய்யப்பட்டனர். (அ)

# பூட்டான் பாராளுமன்ற உறுப்பினர்களின் கணனி விளையாட்டுக்குத் தடை

(திம்பு)

பூட்டானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பணி நேரத்தில் கணனி விளையாட்டுக்களில் மும்முரமாக ஈடுபடுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளையடுத்து, அந்நாட்டு பாராளுமன்றமானது அவர்களுக்கு கடமைக்கு 'லப்டொப்' கணனிகளை எடுத்து வருவதற்கு தடை விதித்துள்ளது.

இது தொடர்பில் சபாநாயகர் நிமாத ஷெரிங் விபரிக்கையில், பாராளுமன்றத்தில் பிரச்சினைகள் தொடர்பில் தீவிரமான விவாதங்கள் நடைபெறுகையில், எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் தமது 'லப்டொப்' கணனி விளையாட்டுக்களில் ஈடுபட்டிருப்பதை நான் கண்டிருக்கிறேன் என்று கூறினார். 'விவாதத்துக்கு தேவையான தரவுகளைப் பெறுவதற்காக எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது 'லப்டொப்' கணனிகளை உபயோகிப்பார்களாயின் அது தொடர்பில் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் அவர்கள் கணனி விளையாட்டுக்களை விளையாடுவதுடன் பாராளுமன்ற விவா தத்தில் அக்கறை காட்டாமலும் உள்ளமை பெரும் பிரச்சினையாக உள்ளது' என சபா நாயகர் மேலும் தெரிவித்தார்.



இந்நிலையில் 'லப்டொப்' கணனிகளை உபயோகிப்பதற்கு விதிக்கப்பட்ட இந்தத் தடைக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் மறுப்பைத் தெரிவித்ததுடன், தம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்தும் நிராகரித்துள்ளனர். (அ)

# எண்ணெய் இறக்குமதி நாடுகள் பெற்றோல் வரியை குறைக்கவேண்டும்

## சவுதி அரேபியா வற்புறுத்தல்

எண்ணெய் இறக்குமதி நாடுகள் உள்நாடு பெற்றோல் வரியைக் குறைக்க வேண்டும் என்று சவுதி அரேபியா கூறியுள்ளது. எண்ணெய் உற்பத்தி நாடுகள் தொடர்ந்து கச்சா எண்ணெய் விலையை உயர்த்தி வருகின்றன. இதனால் பெரும்பாலான நாடுகளில் பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு விலைகள் உயர்த்தப்பட்டுள்ளன.

எனவே எண்ணெய் உற்பத்தி நாடுகளை எண்ணெய் விலையக் குறைக்கும்படி இறக்குமதி நாடுகள் வற்புறுத்தி வருகின்றன.

இதுகுறித்து எண்ணெய் உற்பத்தியில் முதலிடத்தில் இருக்கும் சவுதி அரேபியா நாட்டு மன்னர் அப்துல்லா கருத்துத் தெரிவிக்கையில்,

எண்ணெய் விலை உயர்வு மக்களை பாதிக்காமல் தடுக்கும் பொறுப்பு உற்பத்தி, இறக்குமதி நாடுகளுக்கும் இருக்கிறது. தற்போதுள்ள நிலையில் நாங்கள் எதையும் செய்யமுடியாது. மாற்று எரிசக்திக்கு கொடுக்கும் விலையை விட எண்ணெய் விலை குறைவாகத்தான் உள்ளது.

பல நாடுகள் எண்ணெய்க்கு அதிக அளவில் உள்நாட்டு வரி விதிக்கின்றன. நுகர்வோரை பாதிக்காமல் இருக்க அவர்கள் வரியை குறைக்க வேண்டும். அனைத்து நாடுகளையும் பாதுகாக்கும் வகையிலேயே எங்கள் கொள்கைகளை வகுத்து இருக்கிறோம். நாங்கள் நியாயமான விலையையே நிர்ணயித்துள்ளோம் என்றார். (அ)

# மனிதாபிமான மீறல்கள் தொடர்பில் கொங்கோ முன்னாள் உதவி ஜனாதிபதிக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு

யுத்த மீறல்கள் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றச்செயல்களில் ஈடுபட்ட காரணத்திற்காக கொங்கோ ஜனநாயகக் குடியரசின் முன்னாள் உதவி ஜனாதிபதி ஜீன்பியரே பெம்பா, தி ஹேக் நகருக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார். அங்கு யுத்த மீறல்கள் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றச்செயல்கள் ஆகியவற்றுக்கு எதிரான வழக்கு விசாரணையை அவர் எதிர்கொள்ளவுள்ளார்.

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் இருந்து கடந்த வருடம் வெளியேறிய பெம்பா பெல்ஜியத்தில் கடந்த மே மாதம் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்படிருந்தார். நெதர்லாந்தில் திஹேக் நகரில் உள்ள சர்வதேச குற்றவியல் விசாரணையில் நீதிமன்றம் இவர் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை செய்யவுள்ளது.

ஒரு காலத்தில் தீவிரவாதத் தலைவராக இருந்த பெம்பா தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களை தொடர்ந்தும் நிராகரித்து வருகின்றார். (அ)

**உலக தரிசனம்**

# 'எக்ஸ்பி' (XP) விற்பனையை மைக்ரோசொப்ட் நிறுத்தியுள்ளது

மைக்ரோசொப்ட் நிறுவனம், தனது 'விஸ்டர் ஒப்ரேட்டிங் சிஸ்டம்' விற்பனை மற்றும் அதன் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில், 'எக்ஸ்பி' (XP) விற்பனையை நிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை முதல் 'எக்ஸ்பி ஒப்ரேட்டிங் சிஸ்டம்' விற்பனையை, வியாபார நிறுவனங்கள் மற்றும் கணனி தயாரிப்பு நிறுவனங்களுக்கும் நிறுத்தியுள்ளதாக மைக்ரோசொப்ட் அறிவித்துள்ளது.

'எக்ஸ்பி' விற்பனை நிறுத்தப்படுவதன் காரணமாக 'விஸ்டா அல்டிமேட்' மற்றும் 'விஸ்டா பிசினஸ்' ஆகிய புதிய ஒப்ரேட்டிங் சிஸ்டங்களை பயன்படுத்த வேண்டிய நிலை உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் எதிர்வரும் ஜனவரி மாதம் முடியும் வரை, சிறிய விற்பனை நிலையங்களில் 'எக்ஸ்பி' விற்பனையை மேற்கொள்ள மைக்ரோசொப்ட் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

மேலும் குறைந்த விலைகளில் கிடைக்கும் கணனிகளில் தொடர்ந்தும் 'எக்ஸ்பி'யை பயன்படுத்தவும் மைக்ரோசொப்ட் தீர்மானித்துள்ளது.

இதற்கிடையில் 'எக்ஸ்பியை காப்பாற்றுவோம்' என்ற பெயரில் 'இன்போவேல்ட்' என்கிற இணையத்தளத்தில் 'எக்ஸ்பி 'பிரியர்கள் பிரசாரத்தை மேற்கொண்டுள்ளனர்.

'வின்டோஸ் 7' வரும் வரை எக்ஸ்பியை தொடர வேண்டுமென இவர்கள் மைக்ரோசொப்ட் நிறுவனத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த நிலையில் 2009 ஆம் ஆண்டில் வின்டோஸ் 7 வெளியிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# ஜனாதிபதியின் ஆட்சியை கவிழ்க்க திட்டம்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உட்பட நால்வர் பிலிப்பைன்ஸில் கைது

(மணிலா)

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி குளோரியா அரோயோவை, ஆட்சி கவிழ்க்க முயன்ற குற்றச்சாட்டில் அந்நாட்டின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் 4 ஓய்வுபெற்ற பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி புதிய ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் வேறு எவரும் சம்பந்தப்பட்டுள்ளார்களா என்பதைக் கண்டறிய விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமை அதிகாரி அவெலினோ ராஸொன் அரசு தொலைக்காட்சியில் உரையாற்றுகை யில் தெரிவித்தார்.

சர்வாதிகாரி பெர்டினன்ட் மார்கோஸின் காலத்தில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ஹோமோபோனோ அடாஸாவும் ஏனைய நால்வரும் ஜப்பானிய வர்த்தகர் ஒருவரை 4மில்லியன் டொலர் நிதியை வழங்கக் கோரி அச்சுறுத்தியதை அடுத்தே கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# பாகிஸ்தானில் போராளிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்த அனைத்து அதிகாரமுண்டு

## அமெரிக்க இராணுவ உயரதிகாரிகள் அறிவிப்பு

(வோஷிங்டன்)

பாகிஸ்தான் மலைப் பிரதேசங்களில் அல்-கொய்தா மற்றும் தலிபான் போராளிகளை இலக்கு வைப்பதற்கான அனைத்து அதிகாரமும் தனக்கு உள்ளதாக அமெரிக்க இராணுவ உயர்மட்ட அதிகாரியொருவர் அறிவித்துள்ளார்.

எனினும் மேற்படி பிராந்தியத்தில் அமெரிக்கப் படையினரும் அனுமதிக்கப்படுவார்களா என்பது குறித்து தகவல் வெளியிட அமெரிக்க இராணுவ அதிகாரி அட்மிரல் மைக் முல்லென் மறுத்துள்ளார்.

பாகிஸ்தானில் மறைந்துள்ள முக்கிய பயங்கரவாத தலைவர்களை இலக்கு வைப்பதற்கான அதிகாரம் உள்ளதா என மைக் முல்லெனிடம் வினவப்பட்டபோது, 'இராணுவ தலைவர் என்ற வகையில் எனக்குத் தேவையான அனைத்து அதிகாரங்களையும் பெற்றுள்ளேன்' என அவர் கூறினார். (அ)

# தாக்குதல் நடத்த திட்டமிட்ட 10பேர் சுமத்திராவில் கைது

(இந்தோனேசியா)

இந்தோனேசியாவில் குண்டு தாக்குதல்களை நடத்த திட்டமிட்டதாகக் கூறப்படும் பத்து சந்தேக நபர்களை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சுமத்திரா தீவில் பொலிஸார் நடத்திய தீவிர தேடுதலின் போது கைது செய்யப்பட்ட இவர்கள் தலைநகரான ஜகார்த்தாவுக்கு கொண்டு செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவரில் ஒருவர் வெளிநாட்டவர் என தெரிவிக்கப்படுகின்றது.

இஸ்லாமிய போராளிக் குழு ஒன்றுடன் தொடர்புடைய இந்த சந்தேக நபர்களை பொலிஸார் தீவிர விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர். (அ)

# கத்தரியில் கழுத்தழுகல் நோய்

இந்த வருடம் சுன்னாகம் பிரதேசத்தில் மாரிகாலம் செய்கையில் கத்தரியில் ஏற்பட்ட கழுத்தழுகல் நோயினால் கத்தரி செடிகளனைத்தும் வாடிவிட்டன. அத்துடன் இதன் தாக்கம் தற்பொழுதும் இருந்து வருகின்றது. இது தண்டு துளைப்பானின் தாக்கமாகவோ? அல்லது கழுத்தழுகல் நோயின் தாக்கமாகவோ? இருக்கும் என்ற குழப்பத்தில் ஆழ்த்தியது.

### கழுத்தழுகல் நோய் என்றால் என்ன?

ஸ்கிளிசோடியம் றொல்வ்சி (Sclerotium rolfsii) எனப்படும் மண்வாழ் பங்கசு தாவரத்தின் கழுத்துப் பகுதியில் அடி அழுகலை ஏற்படுத்துவதனால் இந்த நோய் ஏற்படுகின்றது. இதன் தாக்கம் ஏறத்தாழ 270 வரையான தாவரங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளது. உதாரணமாக பூசணி, தக்காளி, சோளம், வற்றாளை, கரும்பு, வெண்டி, கத்தரி, அவரையினம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இது எப்போதும் முதிர்ந்த தாவரங்களிலேயே தொற்றை ஏற்படுத்துகின்றது.

### நோயின் அறிகுறி

கழுத்தழுகல் நோயின் ஆரம்பத்தில் மெதுவான வாடல் தென்படும். இவ்வாடல் காலையிலும் மாலையிலும் இல்லாதிருக்கும். மண்ணின் மேற்பரப்பிற்கு அண்மையாக தண்டில் வெண்ணிறப் பூஞ்சணம் காணப்படும். மேலும் இலைகளின் நுனிப் பகுதியிலிருந்து கருகுவதுடன் சில நாட்களில் தாவரம் முற்றாக இறந்து விடும்.

நோய்த் தொற்று ஏற்பட்ட தாவரத்தின் கழுத்துப்பகுதியுடன் கூடிய வேரை ஈரப்பதனான இடத்தில் வைக்கும்போது வெண்ணிறப் பூஞ்சணம் வளருவதை அவதானிக்க முடியும். இப் பூஞ்சணத்த வளர்ப்பூடகத்தில் வளர்க்கும்போது வெண்கம்பளி போன்ற பூஞ்சணம் உருவாகும்.

### பங்கசின் உயிரியல்

மேலுள்ள மண்படையில் வாழ்கின்ற இப் பங்கசிற்கு சூழல் சாதகமாகவும் தாவரத்திற்கு பாதகமாகவும் காணப்படுகின்ற போதே தொற்று ஏற்படுகின்றது. இது தொற்றை ஏற்படுத்த முன்னர் மண்படையில் தடித்த கலச் சுவரைக் கொண்ட வெண்ணிறப் பூஞ்சண இழைகள் உருவாகின்றன.

இது நொதியங்களை தாவர மேற்பரப்பில் சுரந்து இதனால் மேற்தோற் கலங்களை அழிவடையச் செய்து தாவரத்தினுள் தொற்றை ஏற்படுத்துகின்றது. தொற்றிற்குள்ளான தாவரக் கழுத்துப் பகுதி அழுகலடைகின்றது. இதன் காரணமாக நீர் கடத்தல் தாவரத்தில் நிறுத்தப்பட்டு தாவரம் வாடுகின்றது.

பூஞ்சணமானது இலிங்கமில் முறை மூலம் இனம் பெருகுவதுடன் பரந்த சூழல் மாற்றத்திற்கு சகிப்புத் தன்மையுடைய ஸ்கிளிரோசியா (Sclerotia) எனப்படும் வித்தியை உருவாக்குகின்றது. தகுந்த சூழல் காணப்ப



டும் போது ஸ்கிளிரோசியாவிலிருந்து (Sclerotia) பூஞ்சண இழை உருவாகின்றது. அமில மண்ணில் இதன் தொற்று அதிகமாகக் காணப்படும். 2-5 வரையான கார அமில நிலையில் (PH) இவற்றின் வளர்ச்சி வீதமும், முளைதிறன் வீதமும் உயர்வாக இருக்கும். கார அமிலநிலை (PH)7 ஐ விட அதிகரிக்குமாயின் இதன் முளைத்தலானது நிரோதிக்கப்படும். 20°C-30°C வரையான வெப்பநிலையில் இதன் வளர்ச்சி துரிதமாகக் காணப்படும் 0°C இல் பூஞ்சண இழை இறக்கும். ஆனால் 10°C இல் ஸ்கிளிரோசியா (Sclerotia) சகிக்கும் தன்மையுடையது.

25%-35% மான ஈரப்பதனில் இப் பூஞ்சண இழை சிறப்பாக முளைக்கும்.. ஆற்றல் உடையது. ஒளியுள்ள போது பூஞ்சணத்தின் வளர்ச்சியும், ஸ்கிளிரோசியாவின் முளைத்தலும் உயர்வாகக் காணப்படும்.

### நோய்க் கட்டுப்பாடு

பொதுவாக தாவர நோய்களை தொற்று ஏற்படுத்திய பின்னர் கட்டுப்படுத்துவதென்பது மிகக் கடினம். ஆனால் நோய்த் தொற்று ஏற்படாது பாதுகாத்தலே மிகச் சிறந்த முறையாகும். இந்த நோயை ஏற்படுத்தும் பங்கசானது வீரியம் குறைந்த மண்வாழ் நுண்ணங்கியாகும். பயிர்ச்செய்கை பண்ணப்படும் மண்வளம் மிக்கதாகக் காணப்படுமாயின் இதன் தொற்று தடுக்கப்படும். அதாவது மண்ணில் சேதனப் பதார்த்தங்களின் அளவு அதிகமாகவும், சராசரி ஈரப்பதனும் காணப்படுமாயின் நன்மை பயக்கும் நுண்ணங்கிகளும், தாவர நோய்களிற்கு எதிரான நுண்ணங்கிகளும் அம்மண்ணில் காணப்படுவதுடன் தாவரத்தின் வேர்ப் பகுதியில் ஒன்றிய வாழ்வை ஏற்படுத்த விளைகின்றன. இதன் காரணமாக இப் பங்கசுவின் தாக்கம் முழுமையாகக் கட்டுப்படுத்தப்படுகின்றது.

நன்கு சேதன உரமிடப்பட்ட மண்ணில் செய்கை பண்ணப்பபடும் தாவரம் வீரியமாகக் காணப்படுவதுடன் அதிகளவான வேர் மயிர்களையும் கொண்டிருக்கும். இதில் ஒன்றிய வாழ்வை ஏற்படுத்தும் நுண்ணங்கிகள் அதிகமாகக் காணப்படுவதனால் நோய் ஏற்படுதல் தவிர்க்கப்படும்.

பெரும்போகத்துடன் தொடர்ந்து வந்த மழை காரணமாக மண்ணினுள் சேதன வளமானது நீரினால் கழுவப்பட்டுச் சென்றிருப்பதன் காரணமாக மண்வளம் குன்றிக் காணப்படும். இதனைத் தடுக்க சேதன உரத்தை மண்ணிற்கு இடுதல் அவசியமாகும். அத்துடன் மழைகாரணமாக மண்ணில் ஈரப்பதன் மிகையாகும் போது வடிதிறனை அதிகரிப்பதனால் இத் தொற்றைக் குறைக்க முடியும்.

கத்தரி பயிரிட்டு 4-8 கிழமைகளில் பொட்டாசியம் (Mop) ஐ இடுவதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க முடியும்.

அதிகமாகவும், எழுந்தமானமாகவும் பங்கசு நாசினிகளையும் , ஏனைய பீடை கொல்லிகளையும் மண்ணிற்குப் பயன்படுத்துவதனால் மண் வாழ் உயிரங்கிகள் யாவும் அழிக்கபடும்.

எனவே இதுபோன்ற நோய்களைக் கட்டுப்படுத்துவதென்பது கடினமானதாகும் . ஏனெனில் பீடைகொல்லிகளின் அந்த பாவனையால் நோய் எதிர் நுண்ணங்கிகள் (Antagonistic microorganism) அழிக்கப்படுகிறது. இதனால் நோய்த் தாக்கம் ஏற்பட வாய்ப்புகள் அதிகரிக்கின்றது. ஆகவே பீடை கொல்லிகளின் பாவனையைக் குறைத்தல் வேண்டும்.

ஒரே குடும்பப் பயிர்களை அதே நிலத்தில் பயிரிடுவது தவிர்த்தல் வேண்டும். அதாவது சுழற்சி முறை பயிர்ச்செய்கை மேற்கொள்வது சிறந்தது. பயிர்ச்செய்கை மேற்கொண்ட நிலத்தில் தொடர்ச்சியாக அடுத்த பயிர்ச் செய்கையை மேற்கொள்ளாது அந் நிலத்தை குறிப்பிட்ட காலத்தின் பின் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்துவது சிறந்தது.

கத்தரி நாற்றுக்களின் நடுகையின்போது நாற்றுக்களின் வேரை நோய் எதிர் பங்கசான ரைக்கோடேமா (Tricoderma virlde, Tricoderma harzianum) கரைசலினுள் நனைத்து நடுவது சிறந்தது. இதனை நோய்த் தொற்று ஏற்பட்ட மண்ணில் விசிறமுடியும்.

நோய்த்தாக்கம் ஏற்பட்ட தாவரத்தையும் அது சார்ந்த மண்ணையும் அவ்விடத்திலிருந்து அகற்றுதல் வேண்டும். அத்துடன் அத் தாவரத்தை எரித்தல் வேண்டும். நோய் ஏற்பட்ட இடத்திலிருந்து ஏனைய தாவரங்களிற்கு நீர் பரவுதல் தடுத்தல் வேண்டும்.

நோய்த் தொற்று ஏற்பட்ட மண்ணை தொற்றிலிருந்து தூய்மைப்படுத்துவதற்கு சூரிய வெப்பமாக்கல் (Solarization) இரசாயனத் தொற்று நீக்கல் ஆகிய முறைகளைப் பயன்படுத்துதல் நன்று.

சி.மயூரன்
சிறப்பு மாணவன், விவசாய உயிரியல்
தகவல் தொடர்பு மையம்,
விவசாயபீடம்.

மண் அமிலத் தன்மை அடையுமாயின் இதனை கார ஊடகமான ($caco_3$) சுண்ணாம்புக் கலவையால் பரிகரிப்பதன் மூலம் நோய்த் தாக்கத்தைக் குறைக்கலாம். நாற்று மேடைகளையும் , பயிர்ச்செய்கை பண்ணப்படும் நிலங்களையும் தொற்று நீக்குவதற்கு இரசாயனத் தொற்று நீக்கிகளான போமலின் (Formalin) குளோசோபுரோமைட் (Chlorobromide) , மெதைல் புரோமைட் (Methyl bromide) , ஆகியவற்றைப் பயன்படுத்த முடியும்.

புளூடோலானில் 500கி/கிராம் (Pludolanil 500g/kg) பங்கசு நாசினினைப் பயன்படுத்தி மண்ணைப் பரிகரிப்புச் செய்யலாம். அதாவது 3g இப் பங்கு நாசினியை 5 லீற்றர் நீரில் கலந்து ஒரு மீற்றர் நிலத்தைப் பரிகரிப்புச் செய்யமுடியும்.



# இலங்கையில் இருண்ட ஆட்சியை வெளிப்படுத்தும் தொடர்ச்சியான மனித உரிமை மீறல்கள் - பாக்கியசோதி சரவணமுத்து

இலங்கையில் இருண்ட ஆட்சியை வெளிப்படுத்தும் வகையில் தொடர்ச்சியாக மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருகின்றன என்று மாற்றுக்கொள்கைகளுக்கான மையத்தின் நிர்வாகி பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

புதன்கிழமை வெளிவந்த “ த மோர்னிங் லீடர்” வார ஏட்டில் அவர் எழுதியுள்ள கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கைப் பத்திரிகை நிறுவனத்தில் நாமல் பெரேரா மற்றும் இலங்கைக்கான பிரித்தானிய தூதரகத்தின் மஹிந்த இரத்தினவீர ஆகியோரை கடத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சி மற்றும் தாக்குதல் சம்பவங்களின் மூலம் இலங்கையில் சட்ட ஒழுங்கு எந்த நிலையில் காணப்படுகின்றது என்பதை மிகத் தெளிவாக புரிந்து கொள்ளமுடியும்.

குறிப்பாக குற்றச்செயல்களுக்கு தண்டனை வழங்கப்படுகின்ற நிலைமை மிகவும் குறைவடைந்துள்ளது என்பதையே இந்தச் சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன. பிரதான பொலிஸ் சோதனைச் சாவடி இராணுவ முகாம் ஊடாக அமைச்சு ஆகியவற்றிற்கு அருகாமையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளமை துரதிர்ஷ்டவசமான சம்பவமென்றே குறிப்பிட வேண்டும். குறிப்பாக அதிகாலை வேளையிலோ அல்லது நள்ளிரவு வேளையிலோ இந்த சம்பவம் இடம்பெறவில்லை.

அதிக போக்குவரத்து நெரிசல் மிக்க மாலை வேளையில் பகிரங்கமாக இந்தப் பாதகச் செயல் இடம்பெற்றுள்ளமை மிகவும் வேதனையளிக்கின்றது. இந்தத் தாக்குதல்களின் மூலம் குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்கப்படாத கலாசாரம் ஒன்று இலங்கையில் உருப்பெற்றுள்ளது என்பதை மறுக்கமுடியாது.

### யாருக்கு இந்தத் தைரியம் வரும்?

குறித்த பிரதேசத்தில் இவ்வாறானதொரு தாக்குதலை மேற்கொண்டு தப்பிச்செல்லக் கூடிய தைரியம் எவருக்கும் கிட்டும். அரசாங்க ஆதரவு இல்லாமல் இவ்வாறானதொரு தாக்குதலை மேற்கொண்டு தப்பிச் செல்லக்கூடிய சந்தர்ப்பம் உள்ளதா என்பது கேள்விக்குறியாக அமைந்துள்ளது.

புதிய பொலிஸ்மா அதிபர் மற்றும் ஊடக அடக்குமுறைகளைக் கண்காணிக்கும் அமைச்சரவை உபகுழுவும் இதற்கு எவ்வாறான விளக்கத்தை முன்வைக்கவுள்ளனர். இந்தத் தாக்குதல்களுக்கும் அரசாங்கத்திற்கும் தொடர்பில்லையென்றால் உடனடியாக ஊடகவியலாளர்களுக்கு உச்சக்கட்ட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். உடனடியாக குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும். இந்தத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் அமைச்சரவை உபகுழுவிற்கு பெரும் சவாலாக அமைந்திருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### முட்டாள்தனம் நிறுத்தப்படவேண்டும்

அனைத்து ஊடக அமைப்புக்களும் மனித உரிமை அமைப்புக்களும் இந்த உபகுழு வின் நடவடிக்கைகள் குறித்து விழிப்புடன் செயற்படவேண்டும். அநேக சந்தர்ப்பங்களில் குற்றச் சாட்டுகளிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக அரசாங்கம் இவ்வாறான ஆணைக் குழுக்கள் மற்றும் குழுக்களை அமைப்பதன் மூலம் பல சம்பவங்களை மூடிமறைத்துள்ளது.

ஆட்சி அதிகாரம் தனிப்பட்ட ஒருவர் அல்லது ஒரு குறிப்பிட்ட நபர்களினால் மேற்கொள்ளப்படும் மோசமான நிலையில் காணப்படுகின்றதாவென்பது இன்னமும் புரியாத புதிராகவே காணப்படுகின்றது. ஜனநாயக சமூகம் என்ற ரீதியில் இவ்வாறான போலி நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு நாம் அணி திரள வேண்டியது மிகவும் இன்றியமையாததாக அமைந்துள்ளது.

இவ்வாறான மிலேச்சத்தனமான தாக்குதலின் மூலம் இருண்ட ஆட்சி வெளிப்பட்டு நிற்பதனை தவிர்க்கமுடியாது. செய்தி ஆசிரியர் மற்றும் லேக் ஹவுஸ் ஊடகவியலாளர்கள் மீது பாதுகாப்புச் செயலாளர் அச்சுறுத்தல் விடுத்தமை. ஊடகவியலாளர் கீத் நொயர் தாக்கப்பட்ட சம்பவம் போன்றவற்றிற்கு எதிராக அமைச்சரவை உபகுழு இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அமைச்சரவை உபகுழுவின் விசாரணைகள் குறித்து சந்தேகம் நிலவுகின்றது. குறிப்பாக இந்த விசாரணைகள் அனைத்துலக முக்கிய பிரமுகர்கள் விசாரணைகளைப் போன்று இறுதியில் பயனற்றதொன்றாக மாறக் கூடிய அபாயம் நிலவுகின்றமை துர்ப்பாக்கிய நிலையாகும்.

### முக்கியத்துவம்

ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகை பெற்றுக் கொள்ள வேண்டிய இக்கட்டான பின்னணியில் அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள் மற்றும் தண்டனை வழங்கப்படாமை மிகப்பாரதூரமான பாதிப்புக்களை ஏற்படுத்தும். குறிப்பாக மனித உரிமை மீறல்கள் கண்காணிப்பு மனித உரிமை மீறல்களுக்கு எதிராக தண்டனை வழங்குதல் போன்றவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். நிலப் பரப்புக்களை பெற்றுக்கொள்ள போராடவில்லை. விடுதலைப்புலிகளை கொன்று அழிப்பதற்காக போராட்டத்தை முன்னெடுக்கின்றோம் என்ற இராணுவத் தளபதியின் கூற்றின்மூலம் மனித உரிமை தொடர்பாக கரிசனை அம்பலமாகின்றது. ஊடகவியலாளர்கள் மீதான காட்டுமிராண்டித்தனமான தாக்குதல், பிக்குகள் மீது கண்ணீர்ப் புகைத் தாக்குதல்கள், காரணமற்ற வகையிலான கைதுகள் போன்றவற்றின் மூலம் மனித உரிமைகள் நிலைமை தெளிவாகப் புலனாகின்றது.

அனைத்து குடிமக்களினதும் அடிப்படை மனித உரிமைகளை பேணிப் பாதுகாக்கக் கூடியதொரு முறைமை உருவாக்கப்பட வேண்டும். தற்போது நிலவும் ஜனநாயக சூழ்நிலையின் அடிப்படையில் படைத்தரப்பினரது தார்மீகப் பொறுப்புக்களை தெளிவுபடுத்துவது சற்று சவாலான விடயமாக அமைந்துள்ளது.

### படையினர் பயங்கரமாக தூண்டப்பட்டுள்ளனர்

படையினருக்கு அதீதமான உளவியல் நிலை ஏற்படக்கூடிய பின்னணி தற்போது உருவாக்கப்பட்டுள்ளது. ‘ரணவிருவன்’ என்ற அடைமொழியின் மூலம் படையினர் பூதாகரமாகதூண்டப்பட்டுள்ளனர். சமவலுவைக் கொண்ட சகவீரர்களை கொன்று குவிப்பதில் அதிக முனைப்புக்காட்டி வருகின்றனர். விடுதலைப் போராட்டமாகவோ தேசிய போராட்டமாகவோ அல்லது பயங்கரவாத எதிர்ப்புப் போராட்டமாகவோ உண்மையில் இதனைக் கருதமுடியுமா? ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் அடைந்த தோல்வி சர்வதேச நாடுகள் இலங்கை மீது கொண்டுள்ள அபிப்பிராயத்தையே வெளிப்படுத்தி நிற்கின்றது. சர்வதேச மாண்புமிக்கோர் குழு நாட்டை விட்டு வெளியேறியுள்ளது. குற்றவாளிகளையும் சாட்சிகளையும் பாதுகாக்கும் சட்டமூலம் பாதிவழியில் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

மூதூர் தன்னார்வத் தொண்டு நிறுவன ஊழியர் படுகொலை தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பிரான்சின் ஏ.சி.எஃப் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. இந்தநிலையில் ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகைத் திட்டம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் மீளவழங்கப்படவுள்ளது. படுகொலை செய்வது என்ற கூற்று பிரச்சினைக்கு எந்த வகையிலும் தீர்வாக அமையாது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பணவீக்கத்தின் தாக்கத்தை சீர்செய்ய "சுப்பர்சேவர்" புதிய சேமிப்புக் கணக்கு!

மதிநுட்பமான சேமிப்பாளர்களுக்கு பூரணமான செயற்பாட்டு நெகிழ்வுத் தன்மையுடன் அதிக வருமானத்தைத் தரக்கூடிய சேமிப்புக் கணக்கு இருக்க வேண்டியதன் அவசியத்தை கொமர்ஷல் வங்கி அடையாளம் கண்டபின் 12% வட்டியுடனான புதிய சேமிப்புக் கணக்கு ஒன்று அறிமுகம் செய்துள்ளது. "கொமர்ஷல் வங்கி சுப்பர் சேவர்" என வர்த்தகக் குறியீடு கொண்ட இப் புதிய சேமிப்புக்கணக்கு வருடாந்த விளைவு வீதமான (AER)12.65 % கொண்டிருப்பதுடன், பண மீட்பு எண்ணிக்கையில் கட்டுப்பாடுகளில்லாத குறைந்த பட்ச ஆரம்ப வைப்பாக ரூ.50.000 வைப்புச் செய்ய வேண்டுமென்று வங்கி அறிவித்துள்ளது.

புதிய திட்டம் பற்றி கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. அமித குணரத்ன விளக்குகையில் சாதாரணமான. சேமிப்புக்கணக்குகளில் ஆர்வத்தை குறைக்கக்கூடிய பணவீக்கத்தின் தாக்கங்களை ஒரு விதத்தில் சீர்செய்வதற்கு நாட்டின் முன்னணி தனியார்துறை வங்கியினால் எடுக்கபட்ட ஒரு நடவடிக்கை இதுவாகும் என்றார்.

சேமிப்புத்திட்டம் எதுவுமே தற்போது நிலவும் பணவீக்கத்தை தோற்கடிக்க முடியாது என ஒப்புக்கொண்ட அவர் தவணை வைப்புக்கள் அல்லது அரசாங்க பிணைகளில் முதலீடு செய்யும் சந்தையில் இல்லாதவர்கள், நாளாந்த வங்கியியல் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய சாத்தியமான அதி உச்ச வருமானத்தை நாடும் சனத்தொகையில் ஒரு பகுதியினரால் வரவேற்கப்படும் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக இத்திட்ட அறிமுகம் அமைகின்றது என மேலும் தெரிவித்தார். கொமர்ஷல் வங்கி "சுப்பர் சேவர்" வழங்கும் 12% உள்நாட்டு வங்கியியல் துறையில் சேமிப்புக் கணக்கின் மீது அளிக் கப்படும் மிகக் கூடுதலான வீதமாகும்.

## அதியுயர் வட்டியுடன் கொமர்ஷல் வங்கி அறிமுகம் செய்யும் சுப்பர் சேவர்

"உண்மையை கூறுவோமாயின் இந்த வட்டி வீதம் மிகவும் நம்பிக்கைக்குரிய மிக ஸ்திரமான உள்நாட்டு வங்கி ஒன்றினால் வழங்கப்படுவதாலும் இது மிகவும் பலமான திட்டமாக அமையுமென்று நாம் நம்புகிறோம்" என்று கொமர்ஷல் வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி திரு.ரவி டயஸ் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் எந்தப் பகுதியிலும் எந்நேரத்திலும் பண மீள்பெறுவனவை இலகுவாக்கும் தனிப்பெரும் ATM வலையமைப்பை கொண்ட வங்கியினால் இது வழங்கப்படுவது மற்றொரு முக்கியமான அம்சமாகும். மேலதிக நன்மைகள்ாக "சுப்பர் சேவர்" அனைத்து கணக்கு வைப்பாளர்களுக்கும் இலவசமாக உடனடி CAT/debit அட்டை இணைதள வங்கியியல் வசதி உங்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப வைப்புப் புத்தகத்தையோ அல்லது வங்கிக் கணக்கு கூற்றினையோ பேண முடியும் வசதி, அவர்களின் கணக்கு மீதியில் 80% வரை துரிதமான தனிநபர் கடன் வசதி போன்றவை அமையும்.

கொமர்ஷல் வங்கியின் 314க்கு மேற்பட்ட ATM கள் மற்றும் உலகெங்கிலுமுள்ள ஒரு மில்லியனுக்கு அதிகமான ATM கள் மூலமாக பண மீள் பெறுவனவு வசதி சுப்பர் சேவர் கணக்கை எந்தக் கிளைகளிலும் அல்லது சுப்பர் மார்க்கெட் வங்கியியல் நிலையத்தின் மூலம் திறந்து கொள்ளமுடியும். இன்றைய தொழில்சார் நிபுணர்களின் வாழ்க்கை முறைக்கு ஏற்ற அதி சௌகரியமான நிதித் திட்டமாக கொமர்ஷல் வங்கி சுப்பர் சேவர் திட்டம் விளங்குகின்றது.


1969இல் ஆரம்பிக்கப்பட்ட கொமர்ஷல் வங்கி இலங்கையின் முன்னணி வங்கியாக நுகர்வோர் வங்கியியல், திறைசேரி மற்றும் பிணைகள் சந்தைகளில் செல்வாக்குமிக்க நிலைகளைக் கொண்டுள்ள இவ்வங்கி இலங்கையில் 165 கணனி இணைப்புள்ள கிளைகள் சுப்பர் மார்க்கெட் வங்கியல் கரும பீடங்கள் மற்றும் சேவை நிலையங்கள் அடங்கிய வலையமைப்பினை கொடுள்ளதுடன், பங்களாதேஸில் அதன் செயற்பாடுகள் ஒன்பது கிளைகளாக வளர்ச்சியடைந்துள்ளது.

இவ் வங்கியை இலங்கையின் ஆண்டில் மிகச்சிறந்த வங்கியாக ஆறு தடவைகள் பிரபல உலக வங்கியியல் சஞ்சிகையான "த பாங்கர்" தரப்படுத்தியதுடன் இலங்கையில் மிகச் சிறந்த வங்கி என தொடர்ந்து பத்து ஆண்டுகளாக "குளோபல் பினான்ஸ்" என்ற அமெரிக்க சஞ்சிகை தரச்சிறப்பு வழங்கியது 2007 ஜுலையில் இவ்வங்கி இலங்கையில் மிகச் சிறந்த வங்கி என "யூரோமணி" என்ற இன்னொரு புகழ்மிக்க சர்வதேச நிதி சஞ்சிகையினால் தரப்படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு எதிரான ஈமெயிலால் பிரஸல்ஸ் அதிகாரிகளுக்கு அதிர்ச்சி

(கொழும்பு)

ஜீ. எஸ். பி. வரிச்சலுகையை இலங்கைக்கு வழங்க வேண்டாம் என்று கோரி பிரஸல் நகருக்கு தினமும் வந்து குவியும்மின் அஞ்



சல்களைக்கண்ட அந்த நாட்டு அதிகாரிகள் அதிர்ந்து போயிருக்கின்றனர் என ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வ தேச வர்த்தக அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கூறினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியாலாளர்கள் சந்திப்பு பாராளுமன்றத்தின் முதலாம் குழு அறையில் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அமைச்சர் மேலும் கூறுயதாவது, பொய்யானஇரு குற்றச்சாட்டுக்களை ஆதாரமாக வைத்தே இந்த மின் அஞ்சல்கள் அனுப்பப்பட்டுள்ளன. இந்த வரிச்சலுகையைப் பெற்றுக்கொள்ளவதற்கான உரிய காலத்தில் இலங்கை விண்ணப்பிக்க வில்லை என்பது ஒரு குற்றச்சாட்டாகும்.

இலங்கையின் வடபகுதியில் கடமையாற்றிய அரச சார்பற்ற நிறுவனமொன்றில் தொண்டர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை விசாரிக்கப்படவுள்ளதாக கூறப்படுவது இரண்டாவது குற்றச்சாட்டாகும்.

இந்த இரண்டு குற்றச்சாட்டுக்களும் எதுவித ஆதாரங்களும் அற்றவையாகும். பொறுப்பற்றவர்களின் இவ்வாறான செயல்கள் காரணமாக பாதிக்கப்படும் கிராமங்களில் வாழும் அப்பாவி ஏழைத்தொழிலாளர்களேயாவர்.

அரசாங்கத்தின் வெளிநாட்டு கொள்கை ஏற்புடையதாக இல்லை என்றும் குற்றம் சுமத்துகின்றனர். இதுவும் ஆதாரம் அற்ற குற்றச்சாட்டு என அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (அ)

# கருணாவின் மீது போர்க் குற்றம் சுமத்தக்கூடிய வாய்ப்பை பிரித்தானியா நழுவவிட்டுள்ளது

## சர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம்

கருணாவை பிரித்தானியா நாடு கடத்தியமை தொடர்பாகச் சர்வதேச மன்னிப்புச் சபை தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளது. கருணாவின் மீது போர்க் குற்றத்தைச் சுமத்தக்கிடைத்த வாய்ப்பை பிரித்தானியா நழுவவிட்டுள்ளதாகச் சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

கருணாவின் மீது சித்திரவதை சட்டவிரோத நிதிசேகரிப்பு, சிறுவர்களைப் படைகளுக்கு சேர்த்தல் ஆகியவை தொடர்பாகப் போர்க் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட வேண்டும் எனத் தாம் கடந்த மே மாதம் 14ஆம் திகதி மற்றும் ஜுன் 4ஆம் திகதிகளில் பிரித்தானியா மெட்ரோபொலிட்டன் காவல்துறையினருக்கு கடிதம் எழுதிய போதும் அதற்கு பதில்கள் கிடைக்கவில்லை எனச் சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை கருணாவின் மீது குற்றங்களைச் சுமத்த தேவையான அனைத்துச் சாட்சியங்களையும் தாம் தயாரித்து வைத்திருந்ததாகச் சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

ஏற்கனவே பிரித்தானியரவில் இருந்த போது முன்னாள் யூகோஸ்லோவேக்கியா, ருவண்டா மற்றும் சியாரா லியோன் ஆகிய வற்றின் தலைவர்களுக்கு எதிராக பிரித்தானியா நடவடிக்கை எடுத்தமையைச் சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# பொலிஸ்மா அதிபர்கள் பதவிகளை இலக்குவைத்துச் செயலாற்றுகிறார்கள்

## ஐ.தே.க.சுட்டிக்காட்டு

பதவிகளை இலக்கு வைத்துக் பொலிஸ்மா அதிபர்கள் கடைமையாற்றுவதற்காக ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது. பொலிஸ் மா அதிபர் பதவிகளில் கடமையாற்றுவோர் ஓய்வு பெற்றதன் பின்னர் தூதுவராலய அல்லது ஆளுநர் பதவிகளை இலக்கு வைத்து அரசாங்கத்திற்கு சார்பாக நடந்து கொள்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதே வேளை பொதுமக்களுக்கு பொலிஸ்காரரால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களை தவிர்க்கும் முகமாக பொதுமக்கள் பாதுகாப்பு இணைப்பு குழுவொன்றை ஐக்கிய தேசியக்கட்சி உருவாக்கியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுவினால் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பாலித் ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். கீழ் மட்டம் முதல் உயர் மட்டம் வரையிலான பொலிஸ் அதிகாரிகள் உரிய முறையில் தமது கடமைகளை மேற்கொள்ளத் தவறும்பட்சத்தில் அவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தராதரம் பார்க்காது பாரபட்சமற்ற ரீதியில் பொதுமக்களுக்கு பொலிஸார் சேவையாற்றுவதனை இதன் மூலம் உறுதிப்படுத்த முடியும் என ஐக்கிய தேசியக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. மேலும் 4 வருடம் சேவையாற்றியுள்ள புதிய பொலிஸ்மா அதிபர் வெள்ளை வான் கும்பல் பற்றி தமக்கு எதுவும் தெரியாது எனக் குறிப்பிட்டுள்ளமை வேதனைக்குரிய விடயம் என பாராளுமன்ற உறுப்பினர் ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். (அ-5)

## வடமத்திய மாகாணசபைத் தேர்தல்

# கொப்பேக்கடுவ பலியான சம்பவத்தில் காயமடைந்த இராணுவ வீரர் போட்டி

லெப். ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவ பலியான சம்பவத்தில் சம்பவத்தில் படுகாயமடைந்து தனது இரு கால்களையும் இழந்த உபாலி விஜயக் கோன் என்ற இராணுவ வீரர் மேஜர் ஜெனரல் ஜானக பெரெராவுக்கு எதிராக வடமத்திய மாகாண சபைத் தேர்தலில் குதித்துள்ளார். சுதந்திரக்கட்சி சார்பில் வடமத்திய சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள உபாலி விஜயக் கோன் புதன்கிழமை மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேசியுள்ளார்.

தேர்தலில் தான் போட்டியிடுவது தொடர்பாக அவர் கூறுகையில், இந்த நாட் டுக்காக உயிர்நீத்த படையினரின் மரணங்களுக்கு அர்த்தமளிப்பதாகவே தான் இந்தத் தேர்தலில் போட்டியிடுவதாகவே தற்போதைய ஜனாதிபதி இந்த நாட்டை பிடித்துள்ள பயங்கரவாதத்துக்கு சரியான பதிலை அளித்து வருகிறார் என்றும்இதனை முன்னர் வந்த அரச தலைவர்கள் செய்திருந்தால் பயங்கரவாதம் இந்த நாட்டிலிருந்து எப்பவோ அழிந்திருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

1992 ஆம் ஆண்டு ஊர்காவற்றுறையில் இடம் பெற்ற கண்ணிவெடித்தாக்குதலில் லெப். ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவ, மேஜர்ஜெனரல் விஜய விமலரட்ண ஆகியோர் கொல்லப்பட்டனர். (அ)

# வெளிநாடுகளுடன் நேரடித் தொடர்புகொள்ள கிழக்கு மாகாணசபைக்கு அனுமதி வேண்டும்

## அரசிடம் பிள்ளையான் அணி கோரிக்கை

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அனைத்துக்கட்சி மாநாட்டுக்காக பிள்ளையான் அணியில் இருந்து பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். மட்டக்களப்பு மாநகர முதல்வர் சிவகீதா பிரபாகரனே இந்தப் பிரதிநிதி எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த மாநாட்டில் தமது கட்சி அரசியலமைப்பின் 13ஆவது சரத்து முழுமையாக அமுல்செய்யப்படவேண்டும் என வலியுறுத்தவுள்ளதாகக் கட்சியின் பேச்சாளர் அசாத் மௌலானா தெரிவித்துள்ளார். இதனைத் தவிர கிழக்கில் அபிவிருத்திகளை மேற்கொள்ள வெளிநாட்டு நிறுவனங்களுடன் நேரடியாகத் தொடர்புகளை பேணக் கிழக்கு மாகாணசபைக்கு அனுமதி வழங்கப்படவேண்டும் எனத் தமது கட்சி, இலங்கை அரசாங்கத்திடம் கோரவிருப்பதாகவும் அசாத் மௌலான குறிப்பிட்டுள்ளார். (அ)

தன் கால்களை முறித்துக் கொள்ளாமல்— எந்தச் கொக்கும் சிட்டோடு பறந்து முந்த முடியாது.

—கொரியா

வலம்புரி

# ஆலோசனை கூறும் காலம் மலையேறிவிட்டது

யுத்தத்தை நிறுத்து, மனித உரிமைய்ய பாதுகார், இனப்பிரச்சினையைத் தீர்த்துவை என்ற கோரிக்கைகள் அனைத்தும் காலம் கடந்து போனவை.

இருந்தும் உலக நாடுகள் காலம் கடந்தவற்றையே உச்சாடனம் செய்து கொண்டிருக்கின்றன.

இந்த அர்த்தமற்ற நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட்டு காத்திரமான –அதட்டலுடன் கூடிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

மனித உரிமை மீறல்களை தடுப்பதில் இலங்கை அரசு கவனம் எடுக்க வேண்டுமென்ற ஆலோசனை அமெரிக்காவால் அல்ல்; அந்த ஆண்டவனால் விடுக்கப்பட்டால் கூட அதனால் எந்தப் பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை. இதுவே யதார்த்தம்.

எனவே உலக நாடுகள் இலங்கை இனப்பிரச்சினையை தீர்க்க வேண்டுமென விசுவாசமாக நினைக்குமாயின் முதலில் இலங்கை அரசுக்கு ஓர் காலக்கெடுவை முன்வைக்க வேண்டும்.

இலங்கை ஓர் சுதந்திரமான ஜனநாயக நாடு என்பது பேச்சளவில் மட்டுமே உள்ளது. அந்த நாட்டில் அமைதியில்லை, சமாதானமில்லை, பொதுமக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது.

இந்நிலையில் மனித உரிமை மீறலில் இலங்கை எத்தனையாம் இடத்தில் உள்ளது என்ற பட்டியல்கள் எதுவும் பயன்தரப்போவதில்லை. 'உலகமயமாதல்' என்ற எண்ணக்கருவின் அடிப்படையில் ஒரு நாட்டில் நீண்டகாலமாக யுத்தம் நடப்பதற்கு சர்வதேசத்தின் அசட்டைத்தனமே காரணம் என்ற முடிபு கூடத் தவறானதல்ல.

உலக மயமாதல் என்ற கருத்து நிலையில் இலங்கைக்கு ஆயுதம் வழங்குதல், இராணுவப் பயிற்சி அளித்தல் போன்றவை கூட, குற்றச் செயலாக– யுத்தத்தை ஊக்குவித்ததாக கருதப்படலாம்.

நிலைமை இவ்வாறு இருக்கின்றபோதிலும் இவையெல்லாம் நடந்து கொண்டிருப்பது இலங்கை போன்ற வறிய நாடுகளை இல்லாதொழிப்பதன் நோக்கமா? என்ற நினைப்பு தவறானதல்ல.


எனவே இத்தகைய சந்தேகங்கள் உலகின் எந்த மூலையில் ஏற்பட்டாலும் அது உலக அமைதிக்கு குந்தகமாக அமையும் என்பது உணரப்பட வேண்டியதாகும்.

இத்தகைய உணர் நிலையின் முடிபு இலங்கை அரசுக்கு காலக்கெடு விதித்து உடனடியாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

அப்போதுதான் இதுவரை உலக நாடுகள் விடுத்த அறிக்கைகளும், ஆலோசனைகளும் அர்த்தமுள்ளவையாக அமையும். இல்லாதவிடத்து உலக நாடுகள் தமது பொழுதுபோக்காக இலங்கை பற்றிக் கதைத்துக் கொண்டன என்பதே உண்மையாகும்.

# சைவம் வளர்த்த சான்றோன்

## இந்து போட் சு.இராசரத்தினம்



இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலப் பகுதியிலே சைவம் வளர்த்த சான்றோர்களின் வரிசையில் சு.இராசரத்தினம் அவர்களும் குறிப்பிடத்தக்கவராவார். 1884ஆம் ஆண்டு ஆடி மாதம் 4ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர் யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்பக்கல்வியையும் கல்கத்தா பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியையும் கொழும்பு சட்டக்கல்லூரியிலே சட்டத்தையும் பயின்று சட்டத்தரணியானார். குடியியல் சட்டத்துறையில் சிறந்த அறிஞராக விளங்கியவர். யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் பதில் நீதி அரசராக பல தடவை பணிபுரிந்தார். அத்தகைய உயர்ந்த பதவிகளை எல்லாம் ஒதுக்கிவிட்டு சைவத்தையும் தமிழையும் வளர்க்கத் தன்னை முழுமையாக அர்ப்பணித்த மகான் இப்பெரியார்.

### சைவப்பெரியார் இந்துபோட் இராசரத்தினத்தின் பிறந்த தினத்தை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது

இவரது காலத்தில் சைவக்கல்வி மரபு பெரிதும் பாதிப்படைந்து இருந்தது. இந்த நிலையில் சைவக்கல்வி மரபையும் தமிழையும் மேம்படுத்தும் நோக்கில் சேர்.பொன் இராமநாதன் முதலானவர்களால் 1923ஆம் ஆண்டு மார்கழி மாதம் சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் இலட்சியங்களை முன்னெடுத்து செல்லும் முக்கிய காரணகர்த்தாவாக இராசரத்தினம் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். அவர் சைவத் தமிழ்ப் பாடசாலைகளிலும் தமிழ் ஆங்கில இரு மொழிப் பாடசாலைகளிலும் யாழ்.குடா நாட்டில் தீவுப்பகுதி, வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், யாழ்ப்பாணம் முதலிய பகுதிகளிலும் வவுனியா , முல்லைத்தீவு முதலிய வன்னிப் பிரதேசங்களிலும் சிலாபம் முதலிய பகுதிகளிலும் பதுளை, நாவலப்பிட்டி என்னும் மலை நாட்டுப் பிரதேசங்களிலும் சைவப் பாரம் பரியங்களைப் பேணும் வகையிலான நடைமுறைகளை மேற்கொண்டார்.

1958ஆம் ஆண்டில் இவரது மேற்பார்வையின் கீழ் சைவ வித்தியா விருத்திச் சங்கப் பொறுப்பில் 187 அரசாங்க நன்கொடைகள் பெறும் பாடசாலைகள் இருந்தன. இது சைவ மக்ளிலும் சைவ சமய வளர்ச்சியின் மீதும் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டினையும் அர்ப்பணிப்பினையும் எடுத்துக்காட்டி நிற்கின்றது.

1928ஆம் ஆண்டு இராசரத்தினம் அவர்களின் தனிப்பட்ட முயற்சியால் யாழ்ப்பாணத்தில் உள்ள திருநெல்வேலியில் சைவ ஆசிரியர் கலாசாலை ஒன்று ஒருவாக்கப்பட்டு சைவத் தமிழ்ப் புலமை, இடையறா முயற்சி முதலான நற்பண்புடைய நல்லாசிரியர்கள் பலர் உருவாக்கப்பட்டனர். 1963ஆம் ஆண்டுவரை 1500க்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்த கலாசாலையினுடைய பணி காலத்தால் அழியாதது.

கிறிஸ்தவ சூழலிலே அநாதவராகக் காணப்பட்ட சைவப் பிள்ளைகள் கிறிஸ்தவ பாடசாலையில் கல்வி கற்றாலும் அவர்கள் வீபூதி தரித்து தமது சைவப் பண்பாட்டுக்கு அமைவாகப் பாடசாலை போகலாம் என்பன சட்டசபையில் தனது தனியாள் தீர்மானத்தின் மூலம் நடைமுறைக்குக் கொண்டுவந்தார். சைவக் கல்வி பாரம்பரியத்தை விருத்தி செய்வதன் மூலம் சைவ சமயத்தின் வளர்ச்சிக்கு வித்திட்ட பெரியார் இவர்.

அநாதரவான பிள்ளைகளும் சமூகத்தில் பின்தங்கிய மக்களும் கல்வி கற்பதற்குரிய வாய்ப்புக்களையும் ஏற் படுத்திக் கொடுத்தார். 1930ஆம் ஆண்டு திருநெல்வேலியில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இரு அநாதை விடுதிகளையும் பாடசாலைகளையும் உருவாக்கினார். அவை இன்றும் உயிர்ப்புடன் இயங்குகின்றன. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் கீழ் இயங்கிய பாடசாலைகளில் எல்லாம் அக்காலத்தில் பின்தங்கிய சமூகத்தவராக கருதப்பட்டவர்களின் பிள்ளைகளை எல்லாம் மேல் நிலை மக்களின் கடும் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் மிகுந்த துணிவுடன் சேர்த்துக்கொண்டார். அதன் மூலம் பிற்பட்ட சமூகத்தவரின் சமூக பொருளாதார கல்வி வளர்ச்சியில் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டை அறிய முடிகின்றது.

நந்தினி ரவீந்திரன்
சைவ வித்தியா விருத்திச் சங்கத்து
(சைவச் சிறுவர் இல்லம்)

சு.இராசரத்தினம் அவர்கள் சுமார் 35 ஆண்டுகள் மேற்கொண்ட தொண்டின் பயனாக சைவ வித்தியா விருத்திச் சங்கம் சைவத்தமிழுலகிற்கு அரும்பணி புரிந்தது எனலாம். அவரது பணியின் பெருமையை இந்து போட் சு.இராசரத்தினம் என்ற பெயரே உணர்த்தி நிற்கின்றது. ஈழத்து சைவத்தமிழ் மக்களுக்கு அளப் பெருந் தொண்டாற்றிய இச் சைவப் பெருமகன் 1970ஆம் ஆண்டு பங்குனி 12ஆம் திகதி சிவபதமடைந்தார்.

# ஊடகவியலாளர் மீதான தாக்குதல் தகவல் தருவோருக்கு ஜனாதிபதி பரிசு

## அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தகவல்

ஊடகவியலாளர் மீது தாக்குதல் நடத்துவோர் பற்றிய தகவல் தெரிவிப்போருக்கு பணப்பரிசு வழங்கப்படும் என ஜனாதிபதி அறிவித்துள்ளார் என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு பாராளுமன்றத்தின் முதலாம் குழு அறையில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது,

ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவதை அரசாங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. இதன் பின்னணியில் யார் செயற்படுகிறார்கள் என்பதைக் கண்டறிய அரசாங்கம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

அரசாங்கத்துக்கு நெருக்கடி கொடுக்கும் முயற்சிகளில் ஒன்றாகவே ஊடகவியலாளர்கள் மீது திட்டமிடப்பட்ட தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இது தொடர்பான விடயங்களைக் கண்டறிய 3 குழுக்களை அரசாங்கம் நியமித்துள்ளது. அடுத்த திங்களன்று நடைபெறவுள்ள. அமைச்சர்களின் குழுக்கூட்டத்தில் இது பற்றி விரிவாக ஆராயப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

ஜனாதிபதி வழங்கப்போகும் பணப்பரிசுத்தொகை எவ்வளவாக இருக்கும் என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், ஜனாதிபதி வழங்குவதால் அத்தொகை மிகவும் கூடியதாகவே இருக்கும் என அமைச்சர் சிரித்துக்கொண்டே கூறினார். (அ)

# கடந்த 6 மாதங்களில் வெளிநாட்டில் வேலை பெற்றுச் சென்ற 154 பேர் மரணம்

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் சென்ற இலங்கையர்களில் 159 பேர் பல்வேறு காரண்ணங்களால் கடந்த 6 மாதங்களில் உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. உயிரிழந்தவர்களில் 100 ஆண்கள் அடங்குவதாகவும் ஏனைய அனைவரும் பெண்கள் எனவும் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இவற்றுள் 114 இயற்கை மரணங்களும் 5 தற்கொலைகளும் 4 கொலைகளும் அடங்குவதோடு வீதி விபத்துக்களால் 20 பேரும் தொழில் புரியும் இடத்தில் ஏற்பட்ட விபத்துக்களில் 16 பேரும் உயிரிழந்துள்ளதாக பதிவாகியுள்ளது என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் வெளியிட்டுள்ளது.

அத்துடன் சவுதி அரேபியாவில் 59 பேரும் குவைத்தில் 22பேரும் கட்டாரில் 31 பேரும் ஐக்கிய அரபு ராட்சியத்தில் 17 பேரும் உயிரிழந்துள்ளதாக பணியகத்தின் வெளிநாட்டு தொடர்புக்காக பொது முகாமையாளர் எல்.றுகுணகே தெரிவித்தார். இதேவேளை ஓமானில் 6 பேரும் கொரியா மற்றும் ஜோர்டான் ஆகிய நாடுகளில் 11 பேரும் லெபனான் மற்றும் சைபிறஸ் நாடுகளில் தலா 8 பேரும் மலேசியா மற்றும் எகிப்து அகிய நாடுகளில் தலா ஒருவரும் உயிரிழந்துள்ளார். (அ)

ஓலைச் சுவடிகள் 55

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

### தும்மினால் யாராவது தேடுகின்றனரா?

பேசிக்கொண்டிருக்கும் போது தும்மினர்ல் "யாரோ உன்னைத் தேடுகிறனர். தும்மினாயல்லவா" என்று பாட்டிமார் கூறுவது வழக்கம். நமக் கும் பாட்டி கூறுவது சரியாக இருக்கும் என்று தோன்றலாம் ஏனென்றால் இவ்வாறு பலரும் கூறுவதுண்டு. ஆனால் விஞ்ஞானம் இதை எவ் வித்திலும் ஏற்றுக்கொள்ளவில்லை

மூக்குக்கும் மூச்சுக் குழாய்க்கும் உள் பாகச்சுவர்கள் "ம்யூகஸ் மெம்பிறெய்ன்" என்ற ஓர் மெல்லிய படலத்தால் மூடியிருக்கும்இதில் தூசி முதலிய நுண்ணிய பொருட்கள் படியும் போது இதைவெளியேற்ற இயற்கையான ஏற்பாடு தான் தும்மல்.

# இந்திய அரசாங்கத்தின் தலையீடு இலங்கையில் அதிகரித்துள்ளது

## ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

இந்திய உயர் மட்டக்குழுவின் பயணம் குறித்து அரசாங்கம் எந்தவொரு அறிக்கையையும் வெளியிடவில்லை. இந்தியாவின் தலையீடு இப்போது இலங்கையில் அதிகரித்துள்ளது என ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்திய உயர் மட்டக்குழுவினர் அண்மையில் இலங்கைக்கு வருகை தந்தபோது வடக்கு-கிழக்கை மீண்டும் இணைக்குமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்துள்ளனர்.

அது மட்டுமன்றி 13-வது அரசியல் திருத்தச் சட்டத்திற்கும் மேலான அதிகாரங்களை தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளனர்.

இந்திய உயர் மட்டக்குழுவினரின் பயணம் குறித்து அரசாங்கம் எந்தவொரு அறிக்கையையும் வெளியிடவில்லை. இந்தியாவின் தலையீடு இப்போது இலங்கையில் அதிகரித்துள்ளது.

வழக்கமாகப் போர் தீவிரமடையும் சந்தர்ப்பங்களில் எல்லாம் இத்தகைய தலையீடுகள் அதிகரிக்கும். ஐ.தே.க ஆட்சி செய்தபோது சமாதான உடன்படிக்கையின் மூலம் பேச்சுவார்த்தைகளை நடத்தினோம்.

அரசாங்கம் தற்போது மேற்கொண்டு வரும் படை நடவடிக்கைகளுக்கு ஐ.தே.கட்சி பூரண ஆதரவை வழங்கி வருகிறது. ஆனால் அரசாங்கம் போர்தொடர்பான செய்திகளை இருட்டடிப்பு செய்கிறது.

இராணுவத்தளபதி சரத் பொன்சேகா புலிகளை ஒழித்துக் கட்ட மேலும் ஒரு வருடம் தேவை என்கிறார். ஆனால் அரசாங்கம் இந்த வருட இறுதிக்குள் புலிகளை ஒழித்துவிடுவோம் என்று கூறுகிறது. தனது தேவைகளுக்காகவே அர்சாங்கம் போரை பயன்படுத்துகின்றது. எதற்கெடுத்தாலும் போரையே இந்த அரசாங்கம் காரணம் காட்டுகிறது. (ச-5)

# சுய விருப்பத்தின் பேரிலேயே இலங்கைக்குத் திரும்பினேன்

## பி.பி.சிக்கு கருணா செவ்வி

(கொழும்பு)

முறைகேடுகள் இல்லாமலும் தனது விருப்பின் பேரிலும் தான் பிரித்தானியாவில் இருந்து இலங்கைக்கு திரும்பியதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரான கருணா தெரிவித்துள்ளார்.

தனது மக்களுக்கு தான் செய்ய வேண்டிய பணிகளை கருத்தில் கொண்டுதான் நாடு திரும்பியதாக அவர் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி தனக்கு கிடைக்கவேண்டுமென்று தான் விருப்பவில்லை என்றும் பிள்ளையான் அப்பதவியில் இருப்பதை தான் வரவேற்பதாகவும் அவர் கூறினார். வடக்கில் நடந்துவரும் மோதல்களுக்கும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுக்குமிடையில் எவ்வித சம்பந்தமும் கிடையாது.

இராணுவத்துக்கு தமது அமைப்பினர் உதவுவார்கள் என்று கூறப்படுவதில் உண்மையில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

தமிழோசைக்கு பிரத்தியேகமாக செவ்வியொன்றை வழங்கிய கருணா, கிழக்கு மாகாணத்தில் அவசரமாக தேர்தல் நடத்தப்பட்டதன் காரணத்தினால் தமது அமைப்புக்கு மேலும் கிடைத்திருக்கவேண்டிய ஆசனங்கள் கிடைக்காமல் போனதாக கூறியுள்ளார்.

இருந்தபோதிலும் தமது அமைப்பு இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றது குறித்தும் தனது கட்சியைத் சேர்ந்த பிள்ளையான் முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்தும் தான் மகிழ்ச்சியடைவதாகவும் கூறினார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேசுவதற்கும் அவர்விருப்பம் கொண்டுள்ளார். இதேவேளை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் கட்சித்தலைவராக கருணா நீடிப்பார் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

கருணா அவர்கள் தன்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தனது வருகையைத் தெரிவித்ததாகவும் தனக்கு வேலைப்பளு அதிகமாக இருப்பதால் பின்னர் சந்திப்பதாக கருணாவிடம் தெரிவித்துள்ளதாகவும் முதல்வர் கூறினார். (ச-5)

## விளையாட்டு விழாவும் கட்டடத் திறப்பு விழாவும்

தொல்புரம் மேற்கு கலைவாணி முன்பள்ளியின் விளையாட்டு விழாவும் - முன்பள்ளிக்கென நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத்தின் திறப்பு விழாவும் இன்று பி.ப 1.30 மணிக்கு நிலையத் தலைவர் வே.சிவசம்பு தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வலி.மேற்கு பிரதேச சபையின் செயலாளர் எஸ்.புத்திசிகாமணியும் திருமதி எலிசபெத் புத்திசிகாமணியும் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (ச-49)

## நான்கு நாட...

களின் செயற்பாடுகள் என்பன கடும் நெருக்கடிக்குள்ளாயின.

அதேநேரம் வன்னியிலிருந்து சென்ற 800 பேர் திரும்பி செல்ல முடியாமல் வவுனியாவில் நிற்கின்றனர்.

இவர்கள் வவுனியா அரச அதிபர் செயலகத்தில் தம்மை பதிவுசெய்துள்ளனர். அத்துடன் நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்கு செல்ல முடியாதுள்ளனர்.

கடும் நோய்வாய்ப்பட்டவர்கள் அம்புலன்ஸில் செல்ல மட்டும் அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. நாள் தோறும் ஒரு அம்புலன்ஸ் சேவையே வவுனியாவுக்கு நோயாளர்களை கொண்டு செல்வது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## அரசியல்துறை ...

புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் ஆயிரத்து 500 உறுப்பினர்களும், மன்னார் மற்றும் வவுனியாவில் ஆயிரம் உறுப்பினர்களும், கிளிநொச்சியில் 2 ஆயிரம் உறுப்பினர்களும் எஞ்சியிருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முழு நாட்டையும் கைப்பற்றி சிங்கள மக்களை இல்லாதொழிப்பதே தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதான நோக்கமாக அமைந்துள்ளதென இராணுவத் தளபதி சரத்பொன்சேகா தெரிவித்துள்ளதாக திவயின நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது. (எ-5)

## தரமற்ற...

செய்யுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இனிவரும் காலங்களில் தரமற்ற பொருட்கள் விற்பனை செய்யப்படுமாயின்பொது முகாமையாளருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் களஞ்சியங்களில் இருந்தும் எக்காரணம் கொண்டும் தரமற்ற பொருட்களை பெற்றுக் கொள்ள வேண்டாமெனவும் ப.நோ.கூ.சங்கங்களுக்கு அரச அதிபர் அறிவித்துள்ளார். (ச)

## யாழ்.பல்கலைக்கழக...

விரிவுரைகள் மற்றும் செய்முறை வகுப்புக்கள் என்பவற்றையும் எவ்வித உத்தியோக பூர்வ முன்னறிவித்தல்களும் இன்றி காலவரையறையற்ற வகையில் நிறுத்தப்பட்டுள்ளன.

மூன்று வாரங்கள் கடந்த நிலையிலும், கற்றல் மற்றும் கல்வி சார் நடவடிக்கைகள் மீள ஆரம்பிப்பதற்குரிய அறிகுறிகள் எதுவும் தென்படாத நிலையில் உரிய நடவடிக்கைகளை கூடிய விரைவில் எடுத்து மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் இடையூறுகள் எதுவுமின்றி தொடர்வதற்காக மருத்துவபீட நிர்வாகத்தின் மீது அழுத்தத்தைக் கொடுக்கும் வகையில் மருத்துவபீட மாணவர்கள் தமது கோரிக்கைகளை முன்வைத்து தங்களது எஞ்சிய கற்றல் மற்றும் கல்விசார் நடவடிக்கைகளை நிறுத்தி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மாணவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் வருமாறு,

* தொடர்ந்துவரும் காலங்களில் இறுதி வருட கற்கைநெறிகள் இடையூறு எதுவுமின்றி நடத்தப்படவேண்டும்.
* இரண்டாம் வருட மாணவர்களின் பரீட்சைகள் யாவும் உரிய காலச்கிரமத்தில் நடத்தப்படவேண்டும்.
* மூன்றாம் வருட கற்கை நெறிக்கான சில பாடநெறிகள் தகுந்த முறையில் முன்னெடுக்கப்படவேண்டும்.
* இயன்றவரை இப்போது நிலவுகின்ற எமது பீடத்திற்கான விரிவுரையாளர் வெற்றிடங்கள் விரைவான முறையில் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றுள்ளது. (ச)

## இராணுவ ரீதியிலான...

விரிவாக்கியிருந்தது. இப்போது வவ்னியா களமுனையிலும் தனது தாக்குதல்களை முடுக்கிவிட்டுள்ளது.

இவ்வாறு நான்கு முனைகளில் தாக்குதல்களை தீவிரப்படுத்தியிருக்கும் சிங்களப் படைகளுக்கு எதிராக இந்த நான்கு முனைகளிலும் புலிப்படை வலிமையான எதிர்த்தாக்குதல்களை மேற்கொள்கின்ற அதேவேளை சிங்களக் கடற்படையைக் குறிவைத்து 5-வது முனையை கடற்புலிகள் கடலில் திறந்துள்ளனர்.

நாள்தோறும் கடும்சண்டைகள் என்ற போரியல் பரிமாணத்துடன் வன்னிப் போர்க்களம் அதிர்ந்தபடி உள்ளது. வன்னிப்போர் தொடர்பாக சிங்களப் படைத்தளபதிகள் தயாரித்த இராணுவ நிகழ்ச்சி நிரலின்படி சண்டைகள் நடைபெறவில்லை என்பதே வன்னிப் போரின் முக்கிய போரியல் அம்சமாக உள்ளது.

இந்த சண்டைகளில் படைத்தரப்பு சந்தித்து வரும் உயிரிழப்பு அதன் உளவுரனை உடைத்துள்ளதுடன் வன்னிக் களமுனையில் அதை மெதுமெதுவாக முடக்கி வருகின்றது.

எந்த நேரத்திலும் -எந்த முனையிலும் ஒரு ஓயாத அலைகள் பாணியிலான வலிந்த தாக்குதலை புலிகள் நடத்துவார்கள் என்று படைத்தலைமை அஞ்சுகின்றது. போரை தனது பிரதான அரசியல் மூலதனமாக வலித்துக் கொண்ட மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ஒரு காத்திரமான இராணுவ வெற்றியை பெறமுடியாது தவிர்க்கின்றது.

பருவமழை தொடங்க முன்னர் கீர்த்தி மிக்க ஒரு இராணுவ வெற்றியை பெற்றுவிட ராஜபக்ஷ -பொன்சேகா கூட்டணி பெரு முயற்சிகள் செய்கின்றது.

அதனாலேயே அண்மைய நாட்களில் வன்னிக்களம் அதிர்ந்தபடி உள்ளதென்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-1)

## அரசியல் கட்சிகளுடன் ஒன்றிணைந்து...

அச் செவ்வியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

**புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகள் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகின்றன. புலிகள் தொடர்ந்து பின்னடைவைச் சந்திப்பதாகச் சொல்லப்படுகிறதே?**

புலிகள் பலவீனப்பட்டு விட்டார்கள் என்ற தோற்றத்தை உருவாக்குவதற்காகப் பொய்யான செய்திகளை சிங்கள அரசு தொடர்ந்து பரப்பி வருகிறது. இதில் உண்மை ஏதும் இல்லை.

மேலும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வரலாற்றில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகள் தங்கள் இன்னுயிர்களை தேசத்தின் சுதந்திரத்துக்காக அர்ப்பணித்துள்ளார்கள்.

கடந்த 30 வருடங்களில் பல தளபதிகள் வீரமரணம் அடைந்துள்ளனர். புதிய தளபதிகள் உருவாக்கப்பட்டுள்ளார்கள். இது விடுதலைப் போராட்ட வரலாறுகளில் சாதாரண விடயம்.

**இந்திய அரசு இலங்கை இராணுவத்துக்கு ராடர்களை வழங்குவதும், விமானிகளுக்கு பயிற்சி அளிப்பதுமாக தொடர்ந்து உதவி செய்கிறதே?**

இலங்கைத்தீவில் சிங்கள இராணுவம் தமிழ் மக்களை தொடர்ச்சியாக கொன்றொழித்து வருகிறது. அவ்வாறானதொரு அரசுக்கு இந்தியா இராணுவ உதவி செய்வது எமக்கு வேதனை அளிக்கிறது.

சிங்கள அரசு இன்னும் அதிகளவில் தமிழர்களை கொல்வதற்கே இத்தகைய நடவடிக்கைகள் உதவும். இதை இந்திய அரசு விளங்கிக் கொண்டு இராணுவ உதவிகளை நிறுத்த வேண்டும் என உலகிலுள்ள 8 கோடி தமிழர்களும் எதிர்பார்க்கிறார்கள்.

**விடுதலைப் புலிகளுக்கு மருந்துப் பொருட்கள், பெற்றோல், வோக்கிடோக்கி கடத்தியதாக தமிழகத்தில்பலர் கைது செய்யப்படுகிறார்கள். இந்த நடவடிக்கைகளால் புலிகள் முடக்கப்படுகிறார்களா?**

அத்தகைய கடத்தல் விவகாரங்களுக்கும் புலிகள் இயக்கத்துக்கும் இடையே எந்தத் தொடர்பும் இல்லை. இது ஒரு விசமப் பிரசாரம். தமிழீழ ஆதரவாளர்களை பயமுறுத்தச் சொல்லப்படும் பொய்யான பிரசாரங்கள்.

**தமிழக மீனவர்களுக்கு இலங்கை இராணுவம் நிரந்தர அச்சுறுத்தலாகிவிட்டது. சில சமயங்களில் மீனவர்களை விடுதலைப் புலிகள்தான் தாக்குவதாக சொல்லப்படுகிறதே?**

இது எமது போராட்டத்திற்கு எதிரான சக்திகளால் பரப்பப்படும் கட்டுக்கதைகள். தமிழக மீனவர்கள் எமது உடன்பிறப்புக்கள். நாம் என்ன விலை கொடுத்தாவ்து எமது உடன் பிறப்புக்களை பாதுகாப்பதில் உறுதியாக இருக்கின்றோம்.

**ஈழத்தமிழர் பிரச்சினையில் தமிழக முதல்வர் கருணாநிதியின் அணுகுமுறை எப்படியிருக்கிறது.?**

கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழ் உணர்வு மிக்கவர். ஈழத்தமிழர் மீது கரிசனையுடையவர். தான் ஆடாவிட்டாலும் தசையாடும் என்ற வகையில் ஈழத்தமிழரின் துன்ப நிலை கண்டு கொதித்துப்போயிருக்கிறார்.

கலைஞரின் சொந்த உணர்வு தி.மு.க என்ற பேரியக்கத்தின் உணர்வாகி, மற்ற தமிழக அரசியல் கட்சிகளுடன் ஒன்று சேர்ந்து, எமது விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவாக ஈழத்தமிழரின் எதிரிகள் திகைப்படையும் அளவுக்கு எழுச்சியடைய வேண்டுமென விரும்புகின்றோம்.

**மத்திய அரசின் நெருக்கடிக்காக கருணாநிதி புலிகளிடம் கறாராக நடந்து கொள்வதாக நினைக்கிறீர்களா?**

மத்திய அரசுக்கு எதிராக, தமிழ் உணர்வுடன் எத்தனையோ போராட்டங்கள் நடத்தியவர் கலைஞர். அவர் மத்திய அரசுக்கு பணிந்து ஆட்சி நடத்துகிறார் என்று சொல்வது தவறு, எனினும் இந்திய - தேசிய அரசியல் - மாநில அரசியல் என்ற எல்லைகளை கடந்து ஈழத் தமிழரின் விடுதலைக்கு உதவ வேண்டியது அத்தியாவசியம் என்ற உண்மைக்கு கலைஞர் முதலிடம் கொடுக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பதில் தவறில்லையே!

**இலங்கைப் பிரச்சினையைக் கையாள்வதில் சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க, மகிந்த ராஜபக்ஷ ஆகியோரிடையே என்ன வித்தியாசம்?**

எந்த வித்தியாசமும் இல்லை. சந்திரிகாவும், ராஜபக்ஷவும் வெளிப்படையாக இனவாதம் கக்கும் போர் பிரியர்கள், ரணில் விக்கிரமசிங்கவை மட்டும் உலகம் ஒரு சமாதானப் பிரியராக அடையாளப்படுத்துகிறது. உண்மையில், அவர் ஜெயவர்த்தன போல குள்ளநரித் தந்திரமுள்ளவர். ராஜபக்ஷ போர் நடத்துவதை அவர்ஆதரிக்கிறார்.

**நெருக்கடி மிகுந்த இன்றைய சூழ்நிலையில் தமிழக அரசுக்கும் இந்திய அரசுக்கும் புலிகள் சொல்வது என்ன?**

இந்திய-சீனப் போரின்போதும், இந்திய-பாகிஸ்தான் போர்களின் போதும் இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டையே சிங்கள அரசு எடுத்திருந்தது வரலாறு. அப்போதெல்லாம் ஈழத்தமிழர்கள் இந்திய அரசுக்கு ஆதரவாகவே செயற்பட்டனர்.

ஆனால், இப்போது ஈழத்தமிழர் தமது சொந்த விடுதலைக்காக இரத்தம் சிந்திப் போராடும்போது, இந்திய அரசு சிங்கள அரசுக்கு உதவுவதை நிறுத்தி, எமது விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவாகச் செயற்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

**பழ.நெடுமாறன் ஈழத் தமிழர் பிரச்சினை மூலமாகத் தனது நலனைப் பெருக்கிக் கொள்வதாகச் சமீபத்தில் கருணாநிதி கூறினாரே?**

நீண்டகாலமாக எந்தவிதச் சலிப்பும் இல்லாமல் எமது விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவாகச் செயற்படுபவர் நெடுமாறன் ஐயா. அவரது பணியை ஈழத்தமிழர்கள் என்றும் மனதில் இருத்தி மரியாதை செலுத்துவார்கள்.

**ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட நளினியை பிரியங்கா சந்தித்ததை விடுதலைப் புலிகள் எப்படிப் பார்க்கிறார்கள்?**

பிரியங்கா எந்த அரசியல் நோக்கமும் இல்லாமல் மனிதாபிமான உணர்வோடு சென்று பர்த்திருக்கிறார் எனக் கருதுகிறேன். (எ-1)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.07.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.